وما ارسلناك الا رحمة للعالمين

# தப்ஸீர் ஆயத் அந்நூர்

:.பழீலத்துஷ் ஷெய்கு
அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா
குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு

قد جاءكم من الله نور وكتاب مبين

# مطالع الجود في تفسير آية النور

بقلم : شمس العارفين وعلم الاولياء وريحان الرسول
السيد عبد العزيز الخوشحالي والرفاعي والحضرمي دامت بركاتهم القدسية

Printed by: Rabbania, INDIA. Ph: 91-431-701685

# தப்ஸீர் ஆயத் அந்நூர்

ஆசிரியர் :
ஃபழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யிது
அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி
தவ்வலல்லாஹு ஹயாதஹு

JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA
No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 466113 Fax : 449055

® Copyright Reserved
பதிப்புரிமை ஆசிரியருக்கே

**இந்நூல்**
**அன்பளிப்புக்குரியது**
**விற்பனைக்கு அல்ல**




நூலின் பெயர் : **தப்ஸீர் ஆயத் அந்நூர்**

நூல் ஆசிரியர் : **ஃபழீலத்துஷ் ஷெய்க்**
**அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ்**
**மௌலானா குஷ்ஹாலி**
**தவ்வலல்லாஹு ஹயாதஹு**

பக்கம் : 176

தொடர் இலக்கம் : 22

முதற் பதிப்பு : **ஏப்ரல் 2002**
**1423 முஹர்ரம்**

வெளியீடு : **ஜம்மிய்யது இஷாஅதி**
**அஹ்லிஸ் ஸுன்னா**
105, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. போன் : 01466113
E-Mail: seyedina@hotmail.com

அச்சிட்டோர் : **ரப்பானியா பிரிண்டிங் பிரஸ்**
16, மதுரை ரோடு, திருச்சி-8.
இந்தியா. போன் : 91-431-701685
E-Mail: rabbaniapress@yahoo.com

## Following are the Addresses where the Book is Available (Free of cost)

**INDIA**

KHANKQA - HE _ KHUSHALIYA
Chillagah Shariff Bihar Gad, Mourna Post
Dist. Muzafar Nagar, U.P. India

MUASKAR WOMEN'S ARABIC COLLEGE
Cholukkar Street,
KAYALPATNAM - 628 204. S. India

RABBANIA PRINTING PRESS
New No.249, Old No. 126-6, Adithya Complex,
Big Bazaar, TRICHY-620 008. S.India

**SRI LANKA**

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
105, Second Cross Street, Colombo-11
Sri Lanka. Phone : 466113, Fax : 449055

**U.S.A.**

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
436, Broad Street, Bristol Canaticut-06010
U.S.A.

**CANADA**

M. YUSUF VHQRA
15, Windsomg Court Markham, Ontario
Canada. L3r-8n7, 1-905-479-9483

**SOUTH AFRICA**

DARUL ULOOM PRETORIA
P.o. Box : 14296, Laudim-0037, Pretoria
Tel : (27-12-3741721



## சமர்ப்பணம்

إلى الحقيقة الفردية روح الوجود وسر كل موجود سيد الثقلين وإمام
الحضرتين سيدنا محمد صلى الله عليه وسلم

إلى كل ولي وولية لله تعالى في مشارق الأرض ومغاربها حيثما حلوا وحلت
أرواحهم في سر علم الله القديم

إلى الذين تجالالأرض بجاهم إلى أحباب رسول الله صلى الله عليه وسلم إلى
الأقطاب والأفراد والأوتاد والأبدال والأطراز والأنجاب
والأغواث والأخيار والعرفاء والنقباء إلى هؤلاء جميعا.

## எமது வெளியீடுகளில் சில :

1. பாங்கில் திருநபியின் திருநாமம் கேட்டு விரல்களை முத்த வேண்டுமா?
2. கப்ருகளின் மீது கட்டிடம் கட்டலாமா?
3. இறைநேசர்களின் கப்ருகளை முத்தமிடலாமா?
4. ஸியாரத்தை நோக்கிப் பயணம்
5. வஸீலா
6. தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கை
7. அண்ணலாரின் அகமியம்
8. உத்தமர் உதயம்
9. மௌலிது ஓதுவோம் வாருங்கள்
10. முத்தமிடல்
11. சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்
12. ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்?
13. எத்தி வைப்போம் வாரீர்
14. இன்னல்களை நீக்கிடும் இனிய திருநாமம்

JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA
No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 466113 Fax : 449055



## என்னுரை

الصلوة والسلام عليك ياسيـــدي وياحبيبي
يارسول الله صلى الله عليه وعلى آله واصحابه وسلم

சர்வ புகழும் புகழ்ச்சியும் அல்லாஹ்வுக்கே! அவன் இவ்வையகத்தைப் படைத்து தனது கிருபையென்னும் மழையைக் கொண்டு சகல ஜீவராசிகளையும் ரட்சித்துப் பரிபாலிப்பவன்.

மேலும் அவனைக் காட்டித்தரும் கண்ணாடியாகவும், படைப்புக்களின் மூலப் பொருளாயும் இலங்கி பரிபூரண ஜோதியாக விளங்கி அனைத்து சிருஷ்டிப் பொருட்களை விட எப்படைப்பும் புகழா அளவிற்கு தமதிறைவனாகிய அல்லாஹ்வைப் புகழ்ந்தபடியால் "அஹ்மத்" என்னும் திரு நாமத்திற்குரியதாகி, எல்லாப் படைப்புக்களாலும் புகழ்ந் தேற்றப்பட்டு எப்படைப்புக்கும் கிட்டாத அளவிற்கு புகழ் வாய்க்கப்பெற்ற காரணத்தால், "முஹம்மத்" என்னும் திருப் பெயருக்குரியதாகி இருளிலிருந்து ஒளியைப் பிரித்து, நன்மையிலிருந்து தீமையைப் பிரித்து, மெய்யிலிருந்து பொய்யைப் பிரித்து, உயர்விலிருந்து தாழ்வைப் பிரித்து, சூரியனிலிருந்து சந்திரனைப் பிரித்து, வானிலிருந்து பூமியைப் பிரித்து, ஆணிலிருந்து பெண்ணைப் பிரித்து, தௌஹீதென்னும் ஒன்றுபடுத்துதலிலிருந்து கைரிய்யத்தென்னும் வேற்றுமையைப் பிரித்து, சர்வ லோகங்களுக்கும் லோகாதிபதியான இறைவனுக்கும் மத்தியில் இரண்டையும் பிரதிபலித்துக் காண்பிக்கும் கண்ணாடியாகிய நபியும், ரஸூலு

மான அஹ்மதுல் முஸ்தபா, முஹம்மதுல் முஜ்தபா, சர்தாரே தோ ஆலம் ஸய்யிதுனா ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லமென்னும் பரம்பொருளின் ஜோதியான நூரே முஹம்மதிய்யாவாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதும், அந்த ஜோதியினின்றும் வெளியான அவர்களது குடும்பத்தார் மீதும், அந்த ஜோதியென்னும் ரஸூலை வழிப்பட்டு வாழ்ந்த தோழர்களின் மீதும் ஸலாத்தென்னும் கருணையும் ஸலாமென்னும் ஈடேற்றமும் சதா காலமும் சுரந்துப் பொழிவதாக. ஆமீன்

எல்லாம் வல்ல அல்லாஹ் தனது தூதரின் அகமியத்தையும் எதார்த்தத்தைப் பற்றியும் அருள் மறையான குர்ஆனில் அந்த ரஸூலை ஏற்றோரை நோக்கி சொல்லும்போது,...

يايهاالذين آمنوا لاتقولوا راعنا وقولوا انظرنا
واسمعوا وللكافرين عذاب اليم

விளக்கம்:-

விசுவாசிகளே! நபியவர்கள் உங்களுடன் உரையாடும் போது உங்களின் கவனக் குறைவின் காரணமாக நபியவர்களால் சொல்லப்பட்டது புரியாமல் போகும்போது அதனைப் புரிந்து கொள்வதற்காக நல்லெண்ணம் கொண்டு மீண்டும் நபியவர்கள் தங்களுக்கு உபகாரம் செய்வதற்காக "ராயினா" என்று சொல்கின்றீர்கள். ஆனால் உங்களால் சொல்லப்பட்ட அப்பதத்திற்கு தவறான ஒரு அர்த்தமும் இருப்பதால் அப்பதம் நயவஞ்சகர்களான முனாபிக்கீன்களுக்கு நபியவர்களை ஏளனம் செய்வதற்கு ஒரு வாய்ப்பாகி விடுவதால் அதற்குப் பகரமாக "உன்ழுர்னா" என்று சொல்லுங்கள்.

அத்துடன் நபியவர்கள் உங்களோடு உரையாடும் போது உங்களின் சிந்தனையை வேறு பக்கம் திருப்பாது மீண்டும் ஒருமுறை அவர்களை சொல்ல வைக்காமல் கவனத்துடன் காது தாழ்த்தி கேளுங்கள். மேலும் காபிர்களுக்கு மகத்தான வேதனையுண்டு. பகரா-104.

இந்த வசனம் முஃமின்களான விசுவாசிகளை நோக்கி



பிரத்தியேகமாக இறக்கப்பட்ட முதல் வசனமாகும். முஃமின்களே! என்று அல்லாஹ்வால் அழைக்கப்பட்ட இம்முதல் வசனத்தில் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற விஷயத்தைக் குறித்துத்தான் விபரிக்கின்றதே அன்றி வேறு எந்தச் சட்டத்தை குறித்தும் பேசவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு தரப்பட வேண்டிய கண்ணியம் சம்பந்தமான விஷயத்திற்கு குர்ஆன் முன்னுரிமை கொடுப்பதுடன் அதனை எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்கிறது. இன்னும் நபியவர்களை கண்ணியப்படுத்துவது ஈமானின் அடிப்படை. இனி அந்த அடிப்படை இழக்கப்படும் போது, அல்லது இழந்து விடும்போது அவர் எவ்வளவு பெரிய துறவியாக, வணக்கவாளியாக இருந்தாலும் அவர் ஈடேற்றம் பெறுவதென்பது கானல்நீரே.

அனைத்து வணக்கங்களை விடவும் நபியவர்களை கண்ணியப்படுத்துவது தான் மேலான ஒன்றாகும் என்பதால் நாம் அந்த நபியவர்களை யாரென்றும், எப்படிப்பட்டவர்களென்றும் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு இந்நூல் ஒரு தூண்டுகோலாக நிச்சயம் அமைந்துள்ளதை நீங்கள் இந்நூலை வாசிக்கும் போதே தெரிந்து கொள்ளலாம்.

பின்னும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வெளித் தோற்றத்தில் பஷராகவும் அந்தரங்கத் தோற்றத்தில் நூராகவும் இருந்தார்கள் என்ற போதிலும் எந்தவொரு சிருஷ்டியைப் போன்றும் அவர்கள் இருக்கவில்லை. இவ்வாறே எந்தவொரு சிருஷ்டியும் அவர்களைப் போன்றும் இருக்கவில்லை.

அதேபோல நபியவர்கள் மனிதராகக் காட்சியளித்தாலும் மனித இனத்திலுள்ள எவரும் அவர்களுக்கு சமமாகாததைப் போன்று தமது நூரானிய்யத்துடைய நிலையிலும் நூரைக் கொண்டு படைக்கப்பட்ட வானவர்களிலும் எவருமே நபியவர்களுக்கு சமமானவர்களல்ல. மனித இனம் மனிதனுக்குரிய குணங்களை மட்டும் கொண்டிருப்பதைப்

போல வானவர்கள் நூரானிய்யத்துடைய பண்புகளை மட்டும் கொண்டிருப்பவர்கள். ஆனால் நபியவர்கள் ஒரே நேரத்தில் முழுமையாக இரு நிலைகளையும் கொண்டவர்களாகக் காட்சியளித்தனர்.

மேலும் நபியவர்கள் மனிதத் தோற்றத்தைக் கொண்டிருந்ததைக் காரணமாகக் கொண்டு அவர்களை தனக்கு ஒப்பாக்கிப் பேசுவோர் எத்தகையவர்கள் என்பதையும் இந்நூலை பார்வையிடுவோர் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இன்னும் அருமை நபியவர்கள் பஷராகவும் நூராகவும் இருக்கின்றார்கள் என்பதை சுன்னத் வல் ஜமாஅத்தினர் ஏகமனதாக நம்புகின்றனர். அதேநேரம் நபியவர்களின் நூர் தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டது என்னும் விஷயத்தில் முஸ்லிம்களிடையே உள்ள பல்வேறு இயக்கங்கள் அனைத்தும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதும் அதற்கு சில உலமாக்களும் துணைபோவதும் தான் மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும்.

யா அல்லாஹ்! உனது ஹபீபானவர்களும் எங்களுக்கு ஷஃபீயியானவர்களுமான திங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் இச்சிறிய பணியை நீ ஏற்று இச்சமுதாய மக்களை காப்பாற்றுவாயாக. ஆமீன். பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.



الحمد لله الذي جعل محمدا فى السر مظهر انوار الكمال وحلاه من أوصافه بكل ما تعرف به إلينا من الجمال والجلال وخصه بالوسيلة في مقام أو أدنى ثم دلاه بعد ما أدناه ليظهر فى العالم لأسمائه الحسنى ومكنه من القرب المقدس فى المكانة العليا وأحله من الجوار المؤنس فى المستوى الازهى وجعله فى العالم نموذج حضرة الحضرات ومرآة ظهور حقائق الأسماء والصفات فأنزل عليه آياته ظهرا وبطنا وعرفه بحقائق الأشياء صورة ومعنى فله الحمد سبحانه.

வல்லோன் அல்லாஹ் என்னும் ஏகனாகிய ரப்புல் ஆலமீன் சிருஷ்டிகள் அனைத்தின் வணக்கத்திற்கும் உரியவனாகும். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர்கள் என்போர் யாருமில்லை. அவன் தனித்தவன். எங்கும் நிறைந்திருப்பவன். எவருடைய தேவையுமற்றவன். அவனுக்கு நிகர் அவனே. அவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகள் அனைத்தும் அவனுக்கே சிரவணக்கம் செய்யத் தக்கவைகளாகும். படைப்புக்கள் அனைத்தும் அவனிடமே தேவையானவைகளாகும். வானவர்கள், நபிமார்கள், வலிமார்கள் போன்றோர் அனைவரும் அவனது அடியார்களே. அவனுக்குச் சிரம் பணிகின்றவர்களே.

இன்னும் அந்த ஏக வல்லோனாகிய அல்லாஹ் தான் அனைத்தையும் இல்லாமையிலிருந்து உள்ளமையின் பக்க

மாகக் கொண்டு வந்தான். அவன் விரும்பியதைப் படைக்கும் சர்வ ஆற்றலையும் கொண்டிருப்பவன். இவ்வாறே அவன் விரும்பிய ஒன்றுக்கு எந்தவொரு முன்மாதிரியும் இல்லாமலேயே உருவாக்குகின்றவன். அதேபோன்று உருவாக்கியவை அனைத்துக்கும் மரணமென்னும் பானத்தைக் கொடுப்பதன் மூலம் மீண்டும் இல்லாமைக்கே கொண்டு சென்று விடுவான். திரும்பவும் அவன் நாடினால் மரணமென்னும் பானத்தைக் குடித்த அப்படைப்புக்களை மீண்டும் அதே வடிவத்தில் எழுப்பி நிறுத்தி விடுவான்.

இன்னும் அவன்தான் வானங்களைத் தூண்கள் எதுவுமின்றி அந்தரத்திலும், இவ்வாறே பூமி அசையாதிருக்க அதன் மீது மலைகளையும், அப்பூமியில் உலாவரும் சிருஷ்டிப் பொருட்களையும் படைத்தான். இவ்வாறே வானங்களிலிருந்து மழையைப் பொழியச்செய்து பூமியை செழிப்பாக்கினான் என்று சொல்லப்படும் இவையனைத்தும் ஒரு சராசரி நிலைகொண்ட மனிதனிடம் கூட காணப்படும் இறைவன் சம்பந்தமான கொள்கை விளக்கமாகும். இனி இத்தகைய கொள்கையுடையவர் எவரோ அவர் நிச்சயம் இணைவைப்பவராக, வைத்தவராக ஒருபோதும் இருக்க மாட்டார்.

இருப்பினும் இப்போது நாம் நமது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில் அல்லாஹ்வாகிய அவனால் படைக்கப்பட்ட படைப்புக்கள் எல்லாமே எந்தவித வித்தியாசமுமின்றி சரிசமமானவைகளா என்னும் கேள்விக்குரிய விடைதான்.

## பூமியில் நடமாடும் படைப்பினங்கள்.

والله خلق كل دابة من ماء فمنهم من يمشي على بطنه
ومنهم من يمشي على رجلين ومنهم من يمشي على
أربع يخلق الله ما يشاء إن الله على كل شيئ قدير

**"இன்னும் அல்லாஹ் நடமாடும் அனைத்து உயிரினங்களையும் தண்ணீரிலிருந்தே படைத்தான். அவைகளில் ஊர்ந்து செல்லக் கூடியதாக சிலவற்றையும், இரு**



**கால்களால் செல்லக் கூடியதாக இன்னும் சிலவற்றையும், இன்னும் சிலவற்றை நான்கு கால்களால் செல்லக் கூடியதாகவும் படைத்தான். அல்லாஹ் தான் நாடியதைப் படைப்பவன். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் பேராற்றல் உள்ளவன்."** (சூரா அந்நூர் : 45).

மேற்கண்ட திருமறை வசனம் பூமியில் உலவித்திரியும் அனைத்து உயிரினங்களும் சமமானவைகளல்ல. ஒன்று இன்னொன்றை விட வித்தியாசமானது மட்டுமின்றி வலுவான சக்தியும் கொண்டதாகுமென்றும் அத்துடன் அவைகளில் இரு கால்களால் நடந்து செல்லும் மனித இனம் சிருஷ்டிப் பொருட்களிலேயே மேன்மையான படைப்பாகும் என்றும் அகிலத்தில் படைக்கப்பட்ட படைப்புக்கள் அனைத்தும் மனிதனுக்காக படைக்கப்பட்டதென்றும் மனித இனத்தை மட்டும் இறைவனுக்காக படைக்கப்பட்டதென்றும் கூறுவதைப் பார்த்தோம். எனவே மனித இனத்திற்கு எந்தவொரு சிருஷ்டிப் பொருளும் சமமாகாது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட வசனத்தில் அல்லாஹ் இப்புவியில் பல்வேறு வகையான சிருஷ்டிகளைப் படைத்திருப்பதாகச் சொன்னதோடுஅவையன்றி இன்னும் பல்வேறு வகையான சிருஷ்டிப் பொருட்களை தான் விரும்பும் விதத்தில் தான் விரும்பும் ஒருவரின் மூலமாகப் படைப்பதாகவும் சொல்கிறான். உதாரணமாக ஸெய்யிதுனா ஸாலிஹ் அலைஹிஸ் ஸலாமவர்களின் பிரார்த்தனையைக் கொண்டு அல்லாஹ்வின் வல்லமையால் ஒரு பாறைக் கல்லிலிருந்து (மலை) ஒட்டகமொன்று வெளிப்படுத்தப்பட்டது. இது நான்கு கால்களைக் கொண்டு பூமியில் உலவித் திரிகின்ற ஒன்றாக இருந்தாலும் இது தண்ணீரைக் கொண்டு படைக்கப்படவில்லையாதலால் இதனை அல்லாஹ் "நாகத்துல்லாஹ்" அல்லாஹ்வின் ஒட்டகம் எனப் பெயரிட்டு கண்ணியப்படுத்தினான்.

மேலும் நான்கு கால்களைக் கொண்டு நடமாடும் உயிரினங்கள் தொடர்பாக அல்லாஹ் மற்றோரிடத்தில் விபரிக்கும் போது.,,,

والانعام خلقها لكم فيها دفء ومنافع ومنها تأكلون.
ويخلق مالا تعلمون.

**"இன்னும் உங்களுக்காகப் படைக்கப்பட்ட மிருகங்களில் சில குளிர்காலத்தில் உங்களுக்கு உதவக் கூடியதாகவும், பிரயோஜனம் தரத்தக்கதாகவும் இன்னும் அவைகளில் சில நீங்கள் உண்ணுவதற்காகவும் இன்னும் நீங்கள் அறிந்து கொள்ளாத மிருகங்களையும் படைக்கிறான். (உதாரணமாக நாகத்துல்லாஹ்)"**

*(சூரா அந்நஹ்ல் 14-01)*

மனிதர்கள் புசிப்பதற்காக படைக்கப்பட்ட மிருகங்களில் ஒட்டகமும் ஒன்றென்றால் மிகையாகாது. ஒட்டகம் ஹலாலான ஒன்றென்பதோடு அதனுடைய அனைத்துப் பொருளும் உண்ணத்தக்க ஒன்றாம். மீறி இதை ஹராம் என்று எவரேனும் சொல்வாராயின் அவர் குர்ஆனைப் பொய்ப்பித்தவராவார். ஆனால் அதேநேரம் ஒட்டகம் ஹலால் தானே என்றெண்ணி "நாகத்துல்லாஹ்" வாகிய அல்லாஹ்வின் ஒட்டகத்தை அறுக்க முடியுமா? இதைக் குறித்த வேத எச்சரிக்கையைப் பாருங்கள்.

ولاتمسوها بسوء فيأخذكم عذاب اليم

**"நாகத்துல்லாஹ்" அல்லாஹ்வின் ஒட்டகத்திற்கு அநீதம் இழைக்காதீர்கள். இல்லையெனில் அல்லாஹ்வின் வேதனை உங்களை வந்தடையும்.**

இத்திருமறை வாக்கியம் அல்லாஹ்வின் ஒட்டகத்தை அறுப்பதைத் தீங்கென்று தீர்ப்பளிப்பதோடு அதற்குத் தண்டனையும் வந்து சேருமென்று எச்சரிக்கின்றது. அதாவது அந்த ஒட்டகத்தை அறுத்தால் அல்லது அதற்குத் துன்பம் விளைவித்தால் உடனே அல்லாஹ்வின் வேதனை வந்து விடும் என்று கூறுகின்றது. ஆதலால் அந்த ஒட்டகம் நான்கு கால்களால் நடந்து செல்லக்கூடியதாக இருந்தாலும் மிருகங்களனைத்தும் தண்ணீரைக் கொண்டே படைக்கப்பட்டன என்னும் இலக்கண விதிமுறைக்கு மாறுபடுவதால் பார்ப்ப



தற்கு ஒட்டகத்தைப் போல் தோன்றினாலும் அதனுடைய ரகசியம் வேறு என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் இந்த ஒட்டகம் மற்ற ஒட்டகங்களைப் போன்றதுமல்ல. மற்ற ஒட்டகங்களுக்குச் சமமானதுமல்ல. மாறாக சமமாக்க முனைந்தால் அது அல்லாஹ்வுடைய கோபப் பார்வை மற்றும் அவனது தண்டனையை அனுபவிப்பதற்குத் தயாராகும் செயல் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இதுபோன்றே ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது கரத்தில் வைத்திருந்த கைத்தடி. இக்கைத்தடி பற்றி திருக்குர்ஆன் கூறும்போது, "**மின்ஹும் மன்ய் யம்ஷீ அலா பத்னிஹ்**" (இக்கைத்தடி) ஊர்ந்து செல்லும் உயிரினங்களுக்கு உட்பட்டதாக இருந்தாலும் இது எல்லா படைப்பினங்களைப் போன்று தண்ணீரால் படைக்கப்பட்ட ஒன்றல்ல. மேலும் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தமது கரத்தில் வைத்திருந்த இக்கைத்தடி தரையில் தமது வயிற்றைக் கொண்டு ஊர்ந்து செல்லக் கூடியதாக இருந்தது. அத்துடன் இதற்கு முகம், கண்கள், நாக்கு, வால் போன்றவைகளும் இருந்தன. அத்துடன் மற்றவர்கள் பேசுவதை உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றலும் இருந்தது. இன்னும் இது உண்ணக் கூடியதாகவும் பருகக் கூடியதாகவும் இருந்தது.

மேலும் சூனியக்காரர்களின் மந்திரிக்கப்பட்ட கயிறுகள் அனைத்தையும் இக்கைத்தடி தின்று தீர்த்து விட்டது. இக்கைத்தடி பாம்பின் தோற்றத்தில் பாம்பின் செயல்களைச் செய்தது. ஆதலால் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் கரத்தில் இருந்த அக்கைத்தடி மற்ற எல்லா கைத்தடிகளை விட மேலானது என்றால் மிகையாகாது.

இவ்வாறே ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நமது உயிருக்கும் மேலான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபைக்கு வருகை தரும்போது "திஹ்யத்துல் கல்பி" என்னும் பெயர்கொண்ட நபித்தோழரின் தோற்றத்தில் வருகை தருபவராக இருந்தனர். இவ்வாறு மனித உருவில் வருகை தந்ததால் "**மின்ஹும் மன்ய் யம்ஷீ அலா ரிஜ்லைன்**" பூமியில் உலவித் திரியும் உயிரினங்களில் சில இருகால்களால் நடமாடக் கூடியது என்னும் திருமறை வசனத்திற்கு

உட்பட்டிருந்தாலும் அவை தண்ணீரால் படைக்கப்பட்டவையல்ல. எனவே இரு கால்களால் நடமாடும் உயிரினங்கள் "நுத்பா" இந்திரியத்தைக் கொண்டுதான் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

அத்துடன் அல்லாஹ் தான் விரும்புவதை உருவாக்கும் வல்லமை கொண்டவன். அவனால் எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் யார் மூலமாகவும் படைக்க முடியும். எந்தப் பொருள் இவ்வகிலத்தில் அவனால் படைக்கப்பட்டவைகளாக இருந்தாலும் எத்தனை உன்னதமான நிலை கொண்டதாக இருந்தாலும் அது அவனுக்கு ஒரு போதும் சமமாகவே முடியாது. மாறாக அவனுக்கு சிரம் தாழ்த்தி வணங்கும் அடிமையாகவே இருக்கும்.

பின்னும் மனிதனை அன்றி உள்ள மற்ற படைப்புக்களுக்கிடையே கூட ஒரு சமநிலை என்பது இல்லாதிருக்கும் போது அல்லாஹ்வின் மிகவுயர்ந்த சிருஷ்டியான மனித இனம் மட்டும் எவ்வாறு சமநிலை கொண்டதாக இருக்க முடியும்?

## மனிதன் எப்படி உருவாகினான்?

இறைவனது சிருஷ்டிப் பொருட்களில் மனித இனம் மிக மிக ஓர் உன்னதமான படைப்பாகும். அவ்வுன்னதமான இந்த இனத்தின் துவக்கம் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும். இதனால்தான் அவர்கள் "அபுல் பஷர்" என்றழைக்கப்படுகின்றனர். இன்னும் இவர்களிலிருந்து தான் மனித இனம் முழுவதும் வெளிக் கொண்டு வரப் பட்டன. இதனை இறைவன்,...

خلقكم من نفس واحدة

**"அல்லாஹ் உங்களை (ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம்) என்னும் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான்"** என்பதாகக் கூறுகிறான். *(அஸ்ஸுமர் - 23 :01)*

அடுத்து ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட மனித இனம் எதைக்கொண்டு படைக்கப்பட்டது என்னும் கேள்விக்கு குர்ஆன் பின்வருமாறு விளக்கம் தருகிறது.



إني خالق بشرا من طين

**"நிச்சயமாக மனிதனை நான் களியினால் படைப்பவனாகும்."** *(அஸ்ஸுமர் - 23 : 05)*

وهوالذي خلق من الماء بشرا

**"அவனே மனிதனை நீரிலிருந்து படைத்தான்."** (புர்கான் - 19 : 05)

خلقناكم من ذكر وأنثى

**"உங்களை நாம் ஆண் பெண் ஆகிய இரு வர்க்கத்தைக் கொண்டு படைத்தோம்."** *(அல் ஹுஜ்ராத் : 49)*

خلق الانسان من نطفة

**"நாம் மனிதனை இந்திரியத்திலிருந்து படைத்தோம்."**

خلقناكم من تراب

**"உங்களை நாம் மண்ணிலிருந்து படைத்தோம்."**

மேற்கூறப்பட்ட வசனங்கள் அனைத்தும் வல்லோனாகிய அல்லாஹ்வின் கூற்றாகும். அத்துடன் அனைத்தும் சத்தியமானவைகள். இதில் ஒரு வசனம் இன்னொரு வசனத்திற்கு எதிர்நிலை கொண்டதாக தென்பட்டாலும் எல்லாமே உண்மையானவைகளாகும். இதன்றி இன்னோரிடத்தில்....

وقد خلقناكم اطوارا

**இன்னும் உங்களை விதவிதமாகப் படைத்துள்ளான்** என்றும் கூறுகிறான்.

ஆதலால் மண்ணிலிருந்தும், களியிலிருந்தும், ஆண் பெண்ணிலிருந்தும், இந்திரியத்திலிருந்தும் மனிதர்களாகிய நம்மைப் படைத்த அல்லாஹ் மேற்கண்ட பொருட்களில் எந்தவொரு பொருளின் சம்பந்தமும் இல்லாமல் சிலரைப் படைத்து தனது வல்லமையை அவன் வெளிப்படுத்தியும் உள்ளான். இதற்கு ஸய்யிதுனா ஆதம் மற்றும் ஈஸா அலைஹிமஸ்ஸலாம் அவர்களே உதாரணமாகும்.

ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதற்கொண்டு மனித இனம் அனைத்தும் மண்ணின் தொடர்புடையதாக இருந்தாலும் அல்லது வெவ்வேறு விதங்களில் படைக்கப்பட்டிருந்தாலும் எல்லோரையும் சமமானவர்கள் என்று சொல்ல முடியுமா?

நானும் நீங்களும் மண்ணைக் கொண்டு படைக்கப்பட்டிருந்தாலும் ஆண் பெண் ஆகிய இருவர் மூலமாகத் தான் பிறந்தோம். அதேநேரம் மண்ணைக் கொண்டு படைக்கப்பட்டிருந்த போதிலும் ஆண் பெண்ணின்றி படைக்கப்பட்ட ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நாம் சமமாக முடியுமா? அல்லது மண்ணின் தொடர்பைப் பெற்றிருந்தாலும் தந்தையின்றி தாயின் உதவியைக் கொண்டு மட்டும் பிறப்பிக்கப்பட்ட "ரூஹுல்லாஹ்"வாகிய அல்லாஹ்வின் ஆன்மாவாகிய நபி ஸய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத்தான் நாம் சமமாக முடியுமா?

அது மட்டுமா? பல்வேறு வகையாக படைக்கப்பட்ட மனிதன் பின்னர் பல சமுதாயமாகவும் ஆக்கப்பட்டான். அந்தச் சமுதாயங்களிலும் கூட ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை விட மேலானதாகவே படைக்கப்பட்டுள்ளது. இதில் கடைசி சமுதாயமாகப் படைக்கப்பட்டு இப்போது வாழ்ந்து கொண்டுள்ள இந்த சமுதாயம் இதற்கு முன்னுள்ள அனைத்து சமுதாயங்களை விட மேன்மையானதாக அல்லவா இருக்கிறது!

இந்நிலையில் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு பல சமுதாயமாகப் படைக்கப்பட்ட மனிதர்கள் ஒருவருக்கொருவர் சமமாகாது ஒருவர் இன்னொருவரை விட மேலானவராகவும் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை விட உயர்வானதாகவும் இருக்கும் போது ஆதம் நபியவர்களுக்கு முன்பே இருந்த ஒருவருக்கு ஆதம் நபியவர்கள் எப்படிச் சமமாக முடியும்? அல்லது அல்லாஹ்வின் ஆன்மாவாகிய ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தான் சமமாக முடியுமா? பின்னும் ரஸூல்மார்களுக்கும் நபிமார்களுக்கும் சமநிலை காண முடியாத ஒருவரை நீ எனக்குச் சமமானவர் ஒப்பானவர் என்று எப்படிச் சொன்



னாய்? இது எந்த வகையில் நியாயமாகும்?

மேலும் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வெள்ளிக்கிழமை அஸருடைய நேரத்தில் களி, நீர் போன்றவற்றைக் கொண்டு படைக்கப்பட்டார்களென்று சொல்லப்பட்டாலும், இவ்வாறே ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரபீவுல் அவ்வல் மாதம் திங்கட்கிழமை பஜ்ருடைய நேரத்தில் படைக்கப்பட்டாலும், இதுபோன்றே உலகிலுள்ள மனித சமுதாயமனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பிறந்திருந்தாலும் உண்மையில் இவர்களனைவரும் அக்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில்தான் பிறந்தார்களா என்று கேட்கப்பட்டால் இப்படி நேரம் மற்றும் காலங்களைக் கொண்டு படைக்கப்பட்டது என்பது மனிதனின் தேகமே அன்றி அந்தத் தேகத்தில் உறைந்துள்ள "ரூஹ்" ஆன்மாவல்ல என்பது எல்லோருக்குமே தெரிந்த ஓர் விஷயமாகும்.

ஆம். ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வெள்ளிக்கிழமை அன்று படைக்கப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் வரை வாழ்ந்து மறைந்தார்கள் என்பதும், ஸய்யிதுனா முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திங்கட்கிழமை அன்று உதயமாகி அறுபத்து மூன்று ஆண்டுகள் இவ்வையகத்தில் வாழ்ந்தார்கள் என்பதும், நீங்களும் நானும் ஒரு குறிப்பிட்ட நாளில் பிறந்து ஒரு குறிப்பிட்ட காலம்வரை வாழ்ந்து மறைந்து போவோம் என்பதும் சரீரமாகிய தேகத்திற்குத்தானே அன்றி ரூஹுக்கல்ல.

காரணம் இப்பூமியில் பிறந்த அல்லது பிறக்கப்போகிற அனைத்து ஆன்மாக்களும் அவைகளுக்குரிய சரீரம் படைக்கப்பட்டு அதில் ஆன்மா ஊதப்படுவதற்கு பல்லாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்பே படைக்கப்பட்டிருந்தது. இதில் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதற்கொண்டு இவ்வுலகில் இறுதியாகப் பிறக்கப் போகிற மனிதன் வரையுள்ள அனைவரது ஆன்மாக்களும் படைக்கப்பட்டு அவைகளிடம்.,,,

நான் உங்களின் ரப்பல்லவா? எனக் கேட்டதாகவும் (அல்லாஹ்வுடைய ஏற்பாட்டில் அவனைக் கொண்டு ஈமான்

கொள்ளும்) அதற்கந்த ஆன்மாக்கள் நீதான் எங்களின் இரட்சகன் என்று சொன்னதாகவும் திருமறை சொல்லிக் கொண்டிருப்பதையும் நாம் தெரிந்து வைத்திருக்கிறோம்.

இவ்வாறு படைக்கப்பட்டிருந்த அந்த ஆன்மாக்களில் எவை எவை நபிமார்களாக அனுப்பப்படும். எவை எவை ரஸூல்மார்களாக அனுப்பப்படும். எந்தெந்த ஆன்மாக்கள் விலாயத்துக்குரியதாக விளங்கும். யார் யாருடைய ஆன்மாக்கள் நல்லடியார்களாக இருக்கும் என்பவை அனைத்தும் அப்போதே வகைப்படுத்தப்பட்டு விட்டன. பின்னர் காலப் போக்கில் அந்த ஆன்மாக்கள் "ஆலமுல் அஜ்ஸாம்" என்னும் சடவுலகை நோக்கி தோற்றமெடுக்கத் துவங்கின. அதற்குரிய முதல் வெளிப்பாடு தான் "அபுல் பஷர்" என்றழைக்கப்படும் முதல் மனிதரான ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும்.

## முதலும் முடிவும் முழுவடிவமும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே!

ஆலமுல் அர்வாஹில் நபிமார்கள், ரஸூல்மார்கள் மற்றும் அனைத்து ஆன்மாக்களிடமும் இறைவன் "நான் உங்களின் ரப்பில்லையா? எனக்கேட்டது போன்று" நபிமார்களிடமும் ரஸூல்மார்களிடமும் தனிப்பட்ட ரீதியில் ஒரு உறுதிமொழியை வாங்கினான். அதுபற்றி அவன் தனது மாமறையில் விபரிக்கும் போது.,,,

وإذ اخذ الله ميثاق النبيين لما آتيتكم من كتاب وحكمة
ثم جاءكم رسول مصدق لما معكم لتؤمنن به ولتنصرنه قال
أأقررتم وأخذتم على ذالكم إصري قالوا أقررنا قال
فاشهدوا وانا معكم من الشاهدين

**நான் வேதத்தையும் ஞானத்தையும் உங்களுக்குத் தந்துள்ளேன். இன்னும் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ரஸூல் வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான்கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களா? இதனை நீங்கள் உறுதி செய்கின்றீர்களா? எனது**



**உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா? என்றும், நாங்கள் அதை உறுதிப்படுத்துகிறோம் என்று நபிமார்கள் சொன்னபோது (அதற்கு அல்லாஹ்) நீங்கள் சாட்சியாக இருங்கள். நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் ஒருவனாக இருக்கிறேன் என்பதாக நபிமார்களிடம் வாக்குறுதி வாங்கியதை நபியே நீர் எண்ணிப்பாரும் என்று கூறுகிறான்.** *(ஆலஇம்ரான் - 03 : 81)*

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வவனியில் அவதரிக்கப் பலகோடி வருடங்களுக்கு முன்பாகவே மனித இனத்தை வழிநடத்தும் வேதங்களையும், ஞானங்களையும் சுமக்கின்ற புனிதமிகு நபிமார்களிடம் அவர்களைப் பற்றி அல்லாஹ் புகழ்ந்து பேசி (மௌலிதை ஓதி)யிருக்கிறான். ஆனால் நாம் அவ்வுயர் நிலை கொண்ட நபியை தற்போது புகழக் கூடாதென்று வாதம் பேசுகிறோம். இது ஒரு புறமிருக்க.,,,

"ஆலமுல் அர்வாஹில்" நபிமார்களின் மத்தியில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறித்து இறைவன், அவர்களை எல்லா நபிமார்களும் ஈமான் கொண்டு உண்மையாக்கி வைக்க வேண்டுமென்று வாக்குறுதி வாங்கினான் எனில் அதற்கு அல்லாஹ்வும் சாட்சியாளர்களில் ஒருவனாக இருந்தான் எனில் அந்தக் காருண்ய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மனிதரே அல்லது நபியே என்ற போதிலும் அவர்கள் மற்ற மனிதர்களுக்குச் சமமாகத்தான் முடியுமா? அல்லது நபிமார்களுக்குத் தான் சமமாக முடியுமா? இத்தனைக்குப் பிறகும் நீ எப்படி அவர்களை உன்னைப் போன்றவர் என்று சொல்கிறாய்?

"ஆலமுல் அர்வாஹில்" அல்லாஹ் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சம்பந்தமாக அனைத்து நபிமார்களிடமும் வாங்கிய அவ்வாக்குறுதி அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் தலைவர் என்பதை ஊர்ஜிதப் படுத்துவதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதைப்பற்றி ஏந்தல் நபியவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்.,,,

நமது நாயகம் ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே தம்மை நபிமார்களுக்கெல்லாம் முதன்மையானவர் என்றும் நபியாக அனுப்பப்பட்டோரில் இறுதியானவர் என்றும் கூறுகின்றனர். ஆகையால் அவர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முன்பே படைக்கப்பட்டிருந்தனர் என்பதுடன் நபியாகவும் இருந்தனர் என்பதையும் சந்தேகம் கொள்ளலாகாது. இதில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் முதல் மனிதர் என்னும் போது நபிமார்களில் தான் தான் முதல்நபி என்று கூறும் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எந்தப் பொருளைக் கொண்டு படைக்கப்பட்டார்கள் என்னும் கேள்வி எழுகிறதல்லவா! அதற்குரிய பதிலைப் பார்க்கு முன் நபிமார்களில் எல்லாம் நான்தான் முதன் முதலாகப் படைக்கப்பட்டேன் என்பதற்குரிய தகவல்களை முதலில் பார்த்து விடுவோம்.

أخبرنا عبد الوهاب بن عطاء عن سعيد بن ابى عروبة عن قتادة قال: وأخبرنا عمزو بن عاصم الكلابي اخبرنا ابو هلال عن قتادة قال قال رسول الله صلى الله عليه وآله وسلم كنت أول الناس فى الخلق وآخرهم فى البعث

**"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் "நான் மனிதப் படைப்பில் முதன்மையானவன். இன்னும் நபிமார்களில் இறுதியானவன் என்று கூறுகின்றனர்."**

*அ-ர் ஹழரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : தபகாத் இப்னு ஸஃத், பாகம்-1, பக்கம்-149. கன்ஸுல் உம்மால், பாகம்-11, பக்கம்-409.* இது ஒரு முர்ஸலான ஹதீதாகும்.

அதாவது நபியவர்களின் ஹதீதை அவர்களது தோழர்கள் சொல்லக் கேட்டதாக தாபியீன்கள் அறிவிப்பார்களாயின் அதனை முர்ஸல் என்று சொல்லப்படும். *(தைசீர் உலூமுல் ஹதீத், பக்கம்-42)*

حدثنا ابو زرعة الدمشقي ثنا محمد بن بكار حدثنا سعيد بن بشير حدثني قتادة عن الحسن عن ابي هريرة رضي الله عنه عن



النبي صلى الله عليه وآله وسلم قال: كنت اول النبيين فى الخلق وآخرهم فى البعث.

**"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர். "படைப்புக்களில் நான் நபிமார்களுக்கெல்லாம் முதன்மையானவன். இன்னும் அனுப்பப்படுவதில் நான் இறுதியானவன்"**

*அ-ர் ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. நுல் : தப்ஸீர் இப்னு அபீ ஹாதிம், பாகம்-9 பக்கம்-316, எண்-17594. தப்ஸீர் இப்னு கதீர், பாகம்-3 பக்கம்-748. தப்ஸீர் அத்துர்ருல் மன்தூர், பாகம்-6 பக்கம்-570. தப்ஸீருல் பகவி, பாகம்-3 பக்கம்-508. கஷ்புல் கிபா, எண்-2005. அஷ்ஷதிரா பில் அஹாதீதில் முஷ்தஹிரா, எண்-716. சுனன் தைலமி, பாகம்-3, பக்கம்-282. தம்ஈஸுத் தையிப் மினல் கபீத், பக்கம்-126.*

மேற்கண்ட இரு ஹதீதுகளில் ஒன்று முர்ஸலானதும் மற்றொன்று ழயீபானதுமாகும். இனி மேற்கண்ட நபிமொழியின் கருத்தைக் கொண்டுள்ள வேறு நபிமொழிகள் ஏதேனும் ஹதீதுக் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளதா என்பதை இப்போது பார்ப்போம்.

عن ابن عباس رضي الله عنهماقال قيل يا رسول الله صلى الله عليه وآله وسلم متى كنت نبيا؟ قال وآدم بين الروح والجسد.

**"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம், அல்லாஹ்வின் ரஸூலே! நீங்கள் எப்போது நபியாக இருந்தீர்கள் எனக் கேட்கப்பட்டபோது ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ரூஹு" (உயிரு) க்கும் "ஜஸது (உடலு)க்கும் இடையிலிருந்த போதே நான் நபியாக இருந்தேன் என்று நவின்றனர்."**

*அ-ர்: இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா நூல் : தப்ஸீர் துர்ருல் மன்தூர், பாகம்-06, பக்கம்-569. மஜ்ம*

*வுல் பஹ்ரைன், எண்-3492, பாகம்-6, பக்கம்-131. சுனன் தைலமி, எண்-4854. முஃஜிமுல் கபீர், பாகம்-12, பக்கம்-73.*

حدثنا ابو الهمام الوليد بن شجاع بن الوليد البـــغدادى حدثنا الوليد بن مسلم عن الاوزاعى عن يحى بن ابي كثير عن ابي سلمة عن ابي هريرة رضي الله عنه قال: قـــالوا يا رسول الله صلى الله عليه وآله وســـلم متى وجبـــت لك النبوة؟ قال وآدم بين الروح والجسد.

**"காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் கண்மணிகளான நபித்தோழர்கள் உங்களுக்கு "நுபுவ்வத்" (நபித்துவம்) எப்போது கடமையானது எனக் கேட்டபோது, அதற்கவர்கள்; நான் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ரூஹு" (ஆன்மாவு)க்கும் "ஜஸது" (சரீரத்திற்)க்கும் இடையில் இருந்தபோது என்மீது நுபுவ்வத் கடமையாக்கப்பட்டது என்பதாகக் கூறினர்."**

*அ-ர் ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : மிஷ்காத், திர்மிதி ஷரீப், கிதாபுல் மனாகிப், பாகம்-5, பக்கம்-569. இமாம் திர்மிதி இதனை ஸஹீஹான ஹதீதென்று குறிப்பிடுகின்றனர்.*

حدثنا عبد الرحمن بن مهدي حدثنا منصور بن ســـعد عن بديل عن عبد الله بن شقيق عن ميسرة الفجر قـــال: قلت يارسول الله صلى الله عليه وآله وسلم متى كنت نبيا؟ قال وآدم بين الروح والجسد.

**"ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம், அல்லாஹ்வின் ரஸூலே! நீங்கள் எப்போது நபியாக ஆகினீர்கள்? என்று கேட்கப்பட்ட போது, அதற்கு நபியவர்கள்; ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருந்த போதே நான் நபியாக இருந்தேன் என்று சொன்னார்கள்."**

*அ-ர் ஹழரத் மஸீரத்துல் பஜ்ர் ரலியல்லாஹு அன்ஹு. நூல்: தலாயிலுன் நுபுவ்வத், இமாம் பைஹகீ, பாகம்-1, பக்கம்-84. தபகாத் இப்னு ஸஃத், பாகம்-7, பக்கம்-60. முஸ்னத் அஹ்மத், எண்-20872. முஃஜிமுல் கபீர், பாகம்-20, பக்கம்-353. சுனன் தைலமி, எண்-4854. தாரீக் கபீர் இமாம் புகாரி, பாகம்-7, பக்கம்-374. தப்ஸீர் துர்ருல் மன்தூர்.*



இதே போன்றதொரு கருத்தைக் கொண்டுள்ள நபிமொழி ஒன்று ஹழரத் அப்துல்லாஹ் பின் ஷகீக் ரலியல்லாஹு அன்ஹுவின் வாயிலாக முஸ்னத் அஹ்மத் என்னும் நூலில் ஹதீத் எண்-16740, 23599லும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

حدثنا عبد الرحمن بن مهدى حدثنا معاوية يعنى ابـــن صالح عن سعيد بن سويد الكلبي عن عبـــد الله بـــن هلال السلمي عن عرباض بن سارية قال: قال رسول الله صلى الله عليه وآله وسلم إني عبـــد الله لخاتم النبـــيين وإن آدم لمنجدل في طينته.

**"திடனாக நான் அல்லாஹ்வின் அடிமை. இன்னும் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் களிக்கிடையில் இருக்கும்போதே நான் நபிமார்களில் இறுதியானவனாக இருந்தேன் எனக் கூறுகின்றனர் காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்."**

*அ-ர் ஹழரத் இர்பாழ் பின் ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : முஸ்னத் அஹ்மத், பாகம்-5, பக்கம்-843. தபகாத் இப்னு ஸஃத், பாகம்-1, பக்கம்-149. ஸஹீஹ் இப்னு ஹிப்பான், பாகம்-14, பக்கம்-313. முஃஜிமுல் கபீர், பாகம்-18, பக்கம்-252. தலாயிலுன் நுபுவ்வத், பாகம்-1 பக்கம்-80.*

இதுவரை மேற்கூறப்பட்ட ஹதீதுகளிலிருந்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நபிமார்களுக்கு மட்டுமல்ல. எல்லா ஆன்மாக்களுக்கும் முந்தியவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்திருக்கும். ஆம். நபியவர்கள் தான் முதன்மையானவர்கள் என்பது அறிஞர்கள் அனைவரின்

ஏகோபித்த கருத்தாகும். பின்னும் மனித இனம் என்பது ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்லாம் அவர்களை கொண்டே துவக்கப்பட்டது என்னும்போது அவர்களுக்கும் முன்னரே நான் நபியாக இருந்தேன் என்று கூறும் நமது நபியவர்களுக்கும் இந்த மனித இனத்துக்கும் என்ன தொடர்பு? அப்படியானால் அவர்களின் எதார்த்தம் என்பது என்னவாக இருக்கும்? சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அல்லாஹ்வின் அருளுக்குரிய முழுவடிவான வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் எதார்த்தத்தை அந்த அணையா ஜோதியின் பிரகாசத்தை வாயால் ஊதி அணைக்க விரும்பும் நயவஞ்சகர்கள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருந்த போதே நான் நபியாக இருந்தேனென நபியவர்கள் சொன்னதற்குரிய கருத்து, ஆலமுல் அர்வாஹில் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஆன்மாவும் நபிமார்களில் ஒருவராக இருந்ததைத் தான் சுட்டிக் காட்டினரே அன்றி ஆதம் நபியவர்களுக்கு முன் படைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லவில்லை என்று கூறுகின்றனர்.

இவர்களது கருத்தை நாம் சரியான ஒன்றென வைத்துக் கொண்டால் அருமை நபியவர்கள் முன்பே நபியாக படைக்கப்பட்டிருந்தனர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நபியவர்களுக்கு நாற்பதாம் வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று பின்பு எப்படிக் கூறுகின்றனர்? இந்த நயவஞ்சகர்கள் முன்னுக்குப் பின் முரணான கருத்தைச் சொல்பவர்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

பின்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வுடைய ஏற்பாட்டில் நபியாக இருந்தார்களே அன்றி ஆதம் நபியவர்களுக்கு முன் படைக்கப்படவில்லை என்னும் அவர்களது கருத்து அவர்களால் எடுத்துக் காட்டப்படும் ஹதீதைக் கொண்டே முறியடிக்கப்படுவதை பாருங்கள். எப்படித் தெரியுமா?

நான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருக்கும் போதே நபியாக இருந்தேன் என்று சொன்னதை கொஞ்சம் உங்களின் சிந்தனைக்கு



முதலில் எடுத்துக் கொள்ளுங்கள்.

அதாவது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ஜஸத்" என்னும் சடத்தத்துவ ஒரு பொருளாக அமைக்கப்படுவதற்கு முன் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நபியாக இருந்ததைப் போலவே ஆதம் நபியவர்கள் "ரூஹ்" என்னும் ஒரு ஆன்மாவின் நிலைக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் நமது நாயகமவர்கள் "நபியாகத்தான்" இருந்துள்ளனர் என்பதை மேற்கண்ட ஹதீத் நமக்கு விளக்கிக் காட்டுவதை உணர்ந்தால் இந்நயவஞ்சகர்களின் வாதம் செயலிழந்து போய் அண்ணல் நபியவர்களே சிருஷ்டிகளில் முதன்மையானவர் என்பதை கண்டிப்பாக புரிந்து கொள்ளலாம்.

எனவே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆதம் நபியவர்களுக்கு முன்னரே படைக்கப்பட்டு நபித்துவம் வழங்கப்பட்ட நபியாக இருந்தார்கள் என்பதை நாம் ஈமான் கொண்டேயாக வேண்டும்.

மேலும் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான் அல்லாஹ்வை ஈமான் கொண்டவர்களில் முதன்மையானவர்களும், இதேபோன்று முஸ்லிம்களிலும் முதன்மையானவர்களாகும் என்பதை நிரூபிக்கும் அல்குர்ஆனின் சூறா அஸ்ஸுமரின் வசனமும் சூறா அன்ஆமின் வசனமும் நபியவர்கள்தான் இறைவனது முதல் சிருஷ்டி என்பதை நமக்குத் தெளிவுபடுத்திக் காட்டி விட்டன.

இனி திங்களெங்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நான் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு முன்பே நபியாக இருந்தேன், படைக்கப்பட்டிருந்தேன் என்பதாகச் சொல்லப்படும் நபிமொழிகள், அல்லாஹ்வால் தோற்றுவிக்கப்பட்ட ஆதம் நபியவர்கள் தான் அவனது முதல் பிரதிநிதி என்னும் தெளிவான கொள்கைக்கு முழுக்க முழுக்க மாறுபட்ட, பிழையான ஒன்றாகவல்லவா இருக்கிறது என்றும், மேலும் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தானே மனித இனத்திற்கெல்லாம் முதல் தந்தையான அபுல் பஷர். அப்படியிருக்கும் போது அண்ணல் நபியவர்கள் அவர்களுக்கும் முன்னதாக படைக்கப்பட்டிருந்தார்கள் என்பதோடு நபி

யாகவும் இருந்தார்களென்று சொல்லப்பட்ட வார்த்தைகள் ஒருவேளை ழயீபான - பலவீனமான சொல்லாக இருக்க லாமோ என்னும் சந்தேகத்திற்குரிய கேள்விகள் நமக்குள் எழுவதை நம்மால் உணர முடிகிறது. ஆதலால் இங்கே இரு விஷயங்களுக்கு முதலில் நாம் விடை காண வேண்டும். அதாவது.,,,

1. அபுல் பஷர் என்றழைக்கப்படும் ஆதம் நபிக்கு முன்பே நான் நபியாக படைக்கப்பட்டிருந்தேன் என்னும் தகவல் பலவீனமானதா?

2. அவ்வாறின்றி சொல்லப்பட்ட தகவல் உண்மையான நம்பத்தகுந்த ஒன்றெனில் நபியவர்களால் சுட்டிக் காட்டப் பட்ட அந்த வாக்கியத்தின் அர்த்தமென்ன?

பின்னும் நபிமார்களில் முதன்முதல் படைக்கப்பட்ட வனும், நபியாக ரஸூலாக அனுப்பப்பட்டோரில் இறுதியா னவனும் நானே என்ற தகவலும், நான் ஆதம் நபியவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருந்த போதே நபியாக இருந்தேன் என்ற தகவலும் பல்வேறு தரப்பாரைக் கொண்டு பல நூல்களில் பதிவாகியுள்ளது.

இதில் ஒரு தகவலை அறிவிப்பவர்களில் ஒருவர் பலவீ னமானவராக இருந்தாலும் அத்தகவலை நம்பிக்கைக்குரிய பலர் உண்மையான ஒன்றென அறிவிக்கும் பட்சத்தில் அத் தகவல் மிகவும் நம்பத்தகுந்த ஒன்றாகி விடும் என்பது உலக நியதி மட்டுமல்ல. ஹதீதுக்கலை நியதியும் அதுதான்.

எனவே மேற்கூறப்பட்ட தகவலை இமாம் திர்மிதி, இமாம் அஹ்மத் பின் ஹன்பல், இமாம் சுயூத்தி, இமாம் பகவி, இமாம் தப்ரானி, இமாம் புகாரி, அபூநயீம், போன்ற பெரும் பெரும் அறிஞர் பெருமக்களெல்லாம் தமது நூல்களில் பதிவு செய்திருப்பதே நமக்கு தக்க சான்றாகும். அத்துடன் நாம் நமது மூதாதையரை மனதார ஏற்றுக் கொண்டிருப் பவர்கள். அவர்களின் வார்த்தைகளை மதிப்பவர்கள். இன்னும் இத்தகவல் நம்பத்தகுந்த ஒன்றல்ல என்று எந்தக் கொம்ப னாலும் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு ஹதீத் ழயீபான தாக இருக்குமாயின் அந்நிலையில் அதற்குரிய சட்டமென்ன?



அதன் வகைகளென்ன? என்பனவற்றை எல்லாம் நமது மூதாதையர்கள் நமக்கு நன்கு விளக்கித்தந்த பின்னர் எல்லா நபிமொழிக் கிரந்தங்களில் இருந்தும் ழயீபான தகவல் களைத் தேடிக் கண்டுபிடித்து அதற்குரிய வகையென்ன என்பதைச் சொல்லாமல் வெறுமனே ழயீப் என்பதற்காக அதை ஆதாரமாக எடுக்க முடியாதென்றொரு புதியதோர் கருத்தை இஸ்லாமிய சமூகத்திற்குள்ளே திணித்ததைக் கொண்டு இஸ்லாமிய சமுதாயத்தையே துண்டாடிய ஒரு வரே தமது "ஸில்ஸிலத்து அஹாதீதிஸ் ஸஹீஹா" என் னும் நூலில் பாகம்-4, பக்கம்-471, எண்-1856ல் மேற்கண்ட நபி மொழி ஸஹீஹானது எனத் தீர்ப்பளித்திருப்பதே இங்கு மிக மிகக் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அவர் தான் அல்பானியாகும். இவர் இச்சமுதாயத்தின் மாபெரும் வழிகேடனும் கூட.

ஆதலால் "அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபுல் பஷராகிய ஆதம் நபியவர்களுக்கு முன்பே நபியாக இருந்தனர்" என்னும் தகவல் நம்பிக்கைக் குரிய ஒரு தகவலாகும் என்பதுடன் அருமை நபியவர்கள் ஆதம் நபியவர்களுக்கும் முந்தியவர்கள் என்பதும் நிரூபன மாவதால் இந்நிலையில் அவர்கள் மண்ணால் படைக்கப் பட்டிருக்க முடியாது என்பதும் நமக்குப் புலனாகிறது. அத்துடன் ஆதம் நபியவர்கள் தான் முதல் மனிதர் என்பதி லும் நமக்குச் சந்தேகமில்லை. ஏனெனில் நமது நபியவர்கள் ஆதம் நபிக்குமுன் மனிதராகத்தான் இருந்தார்கள் என்பதை நாம் நிரூபிக்க முன்வரவில்லை. அவ்வாறாயின் நாம் நிரூபிக்க முனைவதென்ன?

## அல்லாஹ்வின் முதல் படைப்பு எது?

இப்புவியிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வால் படைக் கப்பட்ட படைப்புக்களேயாகும். இனி அவை நமது கண்க ளுக்குப் புலப்பட்டாலும் சரி. புலப்படாமல் போனாலும் சரி. அதேநேரம் படைக்கப்பட்ட சிருஷ்டிகளில் மனித இனம் தான் மிகச் சிறந்த ஓர் சிருஷ்டியாகும்.

இன்னும் சிருஷ்டிகளனைத்தும் மனிதனுக்காகவும் மனிதன் தன்னைப் படைத்தவனை வணங்குவதற்காகவுமே

படைக்கப்பட்டான். இதைக்குறித்து இறைவன்.,,,

وما خلقت الجن والانس الا ليعبدون

**"ஜின்னையும் மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன் என்று கூறுகிறான்."**

*(அத்தாரியாத்-56)*

வணங்குவதற்காக என்றால் இங்கே அறிவதற்காக என்பது பொருளாகும். எனவே மனிதனும் ஜின்னும் அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்காகப் படைக்கப்பட்டுள்ளதால் தான் மனிதன் எல்லா சிருஷ்டிகளை விடவும் உயர்ந்தவனாகத் திகழ்கிறான். இக்கருத்தை தான் கீழ்காணும் அரபி வாக்கியமும் சொல்லிக் காட்டுகிறது.

كنت كنــزا لاأعرف فأحببت أن أعرف فخلقت خلقا

**"நான் (அல்லாஹ்) அறியப்படாத ஒரு மறைபொருளாக இருந்தேன். அதுபோது நான் அறியப்படுவதற்காக படைப்புக்களை படைத்தேன்"**

இது ஸூஃபிய்யாக்கள் மத்தியில் பேசப்படும் ஒரு வாக்கியமே அன்றி இதை ஹதீத் என்று சொல்வதற்குரிய ஆதாரம் எதுவுமில்லை. அதேநேரம் மேற்கண்ட அரபி வாக்கியத்திற்குத்தான் ஆதார்ரமில்லையே தவிர அந்த வாக்கியத்தில் பொதிந்துள்ள கருத்துக்கு ஆதாரமில்லை என்பது அர்த்தமல்ல. அத்துடன் ஸூஃபிய்யாக்கள் மத்தியில் பேசப்படும் ஒன்று ஆதாரமற்றதாக நிச்சயம் இருக்காது. (கஷ்புல் கிபா, 2-121)

எனவே சிருஷ்டி என்பதன் கருத்து சிருஷ்டிகர்த்தாவை அறிவதேயாகும். இது மனிதனைக் கொண்டு மட்டுமே சாத்தியமாகும். அதனால் தான் மனித இனம் எல்லா இனத்தை விட மேலான அந்தஸ்த்தை கொண்டதாக அமைந்துள்ளது.

இதில் அறியப்படாத பொருளாக இருந்த அல்லாஹ் தான் அறியப்பட வேண்டுமென்று நினைத்ததும் அவனால் முதன் முதல் படைக்கப்பட்ட பொருள் எது என்பதே தற்



போது நமக்குமுன் எழுந்துள்ள கேள்வியாகும். அதேநேரம் அறியப்படாது இருந்தவனை அறிந்து கொள்ளும் பொருள் என்பது மனிதன் என்னும் பொருள்தான். அப்படியானால் அந்த மனிதன்தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப் பட்டிருக்க வேண்டும். அதுதான் நியதியும் கூட. இதற்கு மாற்றமான தகவல்கள் காணப்படும் பட்சத்தில் அதை விளக்குவது நம்மீது கடமையுமாகும்.

## தண்ணீர் தான் முதல் படைப்பு

إن رسول الله صلى الله عليه وآله وسلم قال كان الله ولم يكن شيئ غيره وكان عرشه على الماء.

**"அல்லாஹ் தனித்தவனாக இருந்தான். இன்னும் அவனது அர்ஷ் தண்ணீரின் மேல் இருந்தது என்று ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர்."** (நூல் : புகாரி, கிதாபு பதியில் கல்கி)

عن ابى هريرة رضى الله عنه قال قلت يارسول الله صلى الله عليه وآله وسلم إني إذا رأيتك طابت نفسي وقــرت عيني فأنبئني عن كل شيئ قال كل شيئ خلق من الماء

**"ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர். அல்லாஹ்வின் ரஸூலே! உங்களைக் கண்டால் என் உள்ளம் மிளிர்கிறது. எனது கண்கள் குளிர்ச்சியடைகின்றன. அருமை ரஸூலே! வஸ்துக்களின் அஸ்த்திவாரம் என்ன? என்று கேட்க, அதற்கு நபியவர்கள்; அனைத்தும் தண்ணீரிலிருந்தே தோற்றுவிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள்."** (அ-ர் ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான், கிதாபுஸ் ஸலாத்.)

إن الله لم يخلق شيئا مما خلق قبل الماء

**"தண்ணீரைப் படைக்குமுன் அல்லாஹ் வேறு எதையும் படைக்கவில்லை."** (நூல் : பத்ஹுல்பாரி,

பாகம்-6, பக்கம்-334, கிதாபு பத்யில் கல்கி.)

மேற்கண்ட மூன்று ஸஹீஹான ஹதீதுகளும் தண்ணீரும் அர்ஷூம் தான் இறைவனது முதல் படைப்பென்று சொல்கிறது. அதிலும் தண்ணீர் அர்ஷுக்கு முன்பே படைக்கப்பட்ட ஒன்று.

إن الماء خلق قبل العرش

**"நிச்சயமாக தண்ணீர் அர்ஷுக்கு முன்பே படைக்கப்பட்டு விட்டது."** (நூல் : பத்ஹுல்பாரி, கிதாபு பத்யில் கல்கி.)

وكان عرشه على الماء

**"அல்லாஹ்வின் அர்ஷ் தண்ணீரின் மேலிருந்தது."** (சூரா ஹூத், வசனம்-7.)

## கலம் முதல் படைப்பு

أول ما خلق الله القلم ثم قال أكتب فجري بما هو كائن الى يوم القيامة

**"அல்லாஹ் முதன் முதல் படைத்தது "கலம்" என்னும் எழுதுகோலாகும். பின்னர் அதை எழுதும்படியாக உத்திரவிட, அது; மறுமை நாள்வரை நிகழும் அனைத்தையும் எழுதிற்று."** (நூல் : பத்ஹுல்பாரி, பாகம்-6, பக்கம்-334, கிதாபு பத்யில் கல்கி.)

முன்னால் சொல்லப்பட்ட நபிமொழிகள் தண்ணீர் தான் அனைத்துக்கும் அஸ்த்திவாரம் என்றும், அதிலிருந்து தான் எல்லாமே படைக்கப்பட்டதென்றும், அதுதான் இறைவனது முதல் படைப்பு என்பதையும் அதன்பின்னரே அர்ஷ் படைக்கப்பட்டதென்னும் விபரத்தையும் பார்த்தோம். ஆனால் மேற்கண்ட நபிமொழி "எழுதுகோல்" தான் முதன் முதல் படைக்கப்பட்டதென்று கூறுகிறது. அப்படியானால் முதன் முதல் படைக்கப்பட்ட பொருள் எது என்னும் கேள்விக்கு இப்போது நாம் விடைகாண வேண்டும். இதற்குரிய பதிலை இமாம் இப்னு ஹஜர் அஸ்க்கலானி ரஹிமஹுல்



லாஹ் அவர்கள் பத்ஹுல்பாரி, என்னும் நூல் பாகம்-6, பக்கம்-334ல் கூறும்போது,,,,

فيجمع بينه وبين ما قبله بأن أولية القلم بالنسبة الى ما عدا الماء والعرش

**"தண்ணீர், அர்ஷ் ஆகிய இவ்விரண்டையும் தவிர்த்து "எழுதுகோல்" தான் முதன் முதல் படைக்கப்பட்டது என்று கூறுகின்றனர்."**

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது, தண்ணீரும் எழுதுகோலும் முதல் படைப்பாக அமைவதற்கு அவைகள் தகுதி வாய்ந்தவைகளல்ல. ஏனெனில் இவ்விரண்டுமே மனிதனுக்காகத்தான் படைக்கப்பட்டன.

மேலும் இங்கே எழுதுகோல் என்பது தண்ணீரும், அர்ஷூம் இன்றி முதல் படைப்பாக படைக்கப்பட்டதால் இவ்விரண்டுக்கும் முன்னால் எழுதுகோல் முதல் படைப்பென்று சொல்லலாம். இதேபோன்று அர்ஷ் என்பதும் அதற்குப் பின்னால் படைக்கப்பட்ட பொருட்களை கவனத்தில் கொள்ளும் போது அது முதல் படைப்பென்பதில் சந்தேகமில்லை. எனவே தண்ணீருக்கும் அர்ஷுக்கும் முன்னதாக ஒரு பொருள் இருந்தது. அதைக்குறித்த ஓர் நபிமொழியைப் பாருங்கள்.

ولقد خلقت العرش على الماء فاضطرب فكتبت عليه لاإله إلاالله محمد رسول الله فسكن

**"தண்ணீரின் மீது அர்ஷ் படைக்கப்பட்ட போது அது நடுங்கவே அதன்மீது லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று எழுதினேன். அதன் பின்னரே அது அமைதியடைந்தது என்பதாக அல்லாஹ் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வஹீ அறிவித்தான்."** (நூல்: அல் முஸ்தத்ரக், பாகம் - 2, பக்கம் - 672.) இன்னும் இது ஒரு ஸஹீஹான ஹதீதாகும் என்று இமாம் ஹாகிம் கூறுகின்றனர்.

எனவே எல்லா சிருஷ்டிகளுக்கும் முதன் முதலாகப் படைக்கப்பட்டவர்கள் நமது நாயகம் ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான். இவ்வாறு நாம் சொல்லவில்லை. ஸய்யிதுனா ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு நபியவர்கள் தருகின்ற பதிலைப் பாருங்கள்.,,,

عن جابر رضي الله عنه قال يارسول الله صلى الله عليه وآله وسلم أخبرني عن أول شيئ خلق الله قبل الأشياء قال: ياجابر إن الله تعالى خلق قبل الأشياء نور نبيك من نوره فجعل ذالك النور يدور بالقدرة حيث شاءالله تعالى و لم يكن في ذالك الوقت لوح ولاقلم ولاجنة ولانار ولاملك ولاسماء ولاأرض ولاشمس ولاقمر ولاجن ولاانس - الحديث

**"அல்லாஹ்வின் ரஸூலே! அனைத்து வஸ்துக்களையும் படைக்குமுன் அல்லாஹ் முதன் முதல் எதைப் படைத்தான் என்பதை எனக்குச் சொல்லுங்களென்று கேட்க, அதற்கு நபியவர்கள்; அல்லாஹ் முதன் முதல் உமது நபியின் "நூரை" அல்லாஹ்வுடைய நூரிலிருந்து படைத்தான். பின்னர் படைக்கப்பட்ட அந்த நூர் அல்லாஹ்வுடைய விருப்பப்படி உலவிக் கொண்டிருந்தது. அப்போது லௌஹு, கலம், பூமி, சூரியன், சந்திரன், மனிதன், ஜின் போன்ற எதுவுமே இருக்கவில்லை ஜாபிரே என்று ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்."** *(அ-ர்: ஹழரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு)*

இந்த ஹதீத் மிக நீண்ட ஓர் ஹதீதின் ஒரு பகுதியாகும். இதனை இமாம் அப்துர் ரஸ்ஸாக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "முஸ்னதில்" பதிவு செய்துள்ளதாக இமாம் கஸ்தலானி, இமாம் ஸுர்கானி, அஷ்ஷைகு தப்பாக், இமாம் நப்ஹானி, இமாம் பைஹகீ, அல்லாமா அப்துல்ஹக் முஹத்தித் தெஹ்லவி போன்றோர் தத்தம் தமது நூல்களில் பதிவு செய்துள்ளனர். பின்னும் இந்த நபிமொழியை அப்துர் ரஸ்ஸாக் அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளதாக அஷ்ஷைகு யூசுப் ஹாஷிமுர்ரிபாஈ தவ்வலல்லாஹு ஹயாத்தஹூ அவர்கள் தமது "அர்ரத்துல் முஹ்கமுல் மனீஃ" என்னும் நூலில் 22ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது மிக மிகக் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.



எனவே தண்ணீர் மற்றும்அர்ஷுக்குப் பிறகு படைக்கப்பட்ட "கலம்" என்னும் பொருளை அதுதான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டதெனச் சொல்லப்பட்ட நபிமொழிக்கு விளக்கமளித்த ஹதீதுக்கலை விரிவுரையாளர்கள் "கலம்" மேற்கண்ட இரு பொருட்களுக்கும் பின்னால் படைக்கப்பட்டிருந்தாலும் கூட அது கலம் என்னும் ஒரு இனத்துக்கு முதன்மையானது தானே என்றெல்லாம் விளக்கமளித்தனர். இதுபோலவே கலம் மட்டுமல்ல. தண்ணீர் மற்றும் அர்ஷ் போன்றவை படைக்கப்படுவதற்கு முன்பே நமது நபியவர்களின் ஜோதிதான் முதன் முதல் படைக்கப்பட்டது.

காரணம் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான் முதன் முதலாகப் படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் நமது நபியவர்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள். இனி அல்லாஹ்வை அறியும் ஆற்றல் என்பது மனிதனுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. பின்னும் தண்ணீரும் கலமும் மனித உபயோகத்திற்காக படைக்கப்பட்ட பொருட்களாகும்.

மேலும் மனித இனம் என்பது ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைக் கொண்டு துவக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு முன்பே மண், தண்ணீர், வானம், பூமி, காற்று, மலக்கு, லௌஹ், கலம் போன்றவை படைக்கப்பட்டிருந்தாலும், யாருக்காக இவைகளெல்லாம் படைக்கப்பட்டனவோ அவைகளனைத்துக்கும் முன்னரே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி படைக்கப்பட்டிருந்தது என்பதுதான் உண்மை.

இங்கே ஆதம் நபியவர்களுக்கு முன்பே நான் படைக்கப்பட்டிருந்தேன் என்னும் நபியவர்களின் வாக்கியம் அவர்கள் நூராகப் படைக்கப்பட்டிருந்தார்கள் என்பதேயாகும்.

இதுபோன்றே தண்ணீரின் மீது அர்ஷை வைத்த போது அது நடுங்கவே அதன்மீது லாஇலாஹ இல்லல் லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று எழுதப்பட்ட பின் அது அமைதியானது என்னும் வாக்கியத்தையும் கவனித் தால் அர்ஷுக்கும் முன்னரே நமது நபியவர்களின் ஜோதி தான் படைக்கப்பட்டிருந்தது என்பதும் நமக்குப் புரியும்.

ஆதலால் அனைத்து சிருஷ்டிப் பொருட்களுக்கும் முன்னதாக நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்களின் ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டதென்னும் ஹதீதுக்கு "நூர்" என்றால் அது "ரூஹ்" தானென்று விளக்கமளிக்கின்றனர். விளக்கம் எப்படித் தரப்பட்டாலும் நமது நபியவர்கள் தான் முதல் படைப்பு என்பதை ஒப்புக் கொண்டால் சரி.

மேலும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அகமியத்தைப் பொய்யாக்கி நபியவர் கள் "நூர்" அல்ல. வெறும் மனிதர் மட்டுமே எனப் பிரச்சா ரம் செய்பவர்கள் "நூர்" சம்பந்தமாகப் பேசும் ஹதீதைப் பற்றி கூறும்போது, அந்த ஹதீதை அறிவிக்கும் இமாம் அப்துர் ரஸ்ஸாக் ரஹிமஹுல்லாஹ் அவர்களை நம்ப முடியாது. ஏனெனில் அவர் ஒரு "ஷியா" என்று தேவ்பந்த் பெரியார்களில் ஒருவரான சர்பராஸ்கான் என்பவர் தமது "நூரே வ பஷர்" என்னும் நூலில் 48வது பக்கத்தில் கூறுகி றார். ஆனால் அவரே அந்நூலின் 100வது பக்கத்தில் தமக்குச் சாதகமான விஷயத்தைச் சொல்லும்போது அதை அறிவிக் கும் அப்துர் ரஸ்ஸாக்கை நம்பத்தகுந்தவர். அவர் மிகப் பெரும் அறிஞர்களில் ஒருவர் என்றும் கூறுகிறார்.

மேலும் இவர் அந்நூலில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு ஜோதியாக படைக்கப்பட்டார்கள் என்னும் நபிமொழியை மறுக்கிறார். பின்னர் அவரிடம் உங்களது முன்னோர்கள் இந்த நபிமொழியை ஸஹீஹான ஒன்றெனக் கூறுகின்றனர் என்றபோது, அதற்கவர்; அதை நாம் எப்போது மறுத்தோம்? என்று கேட்டுவிட்டு, எமது பெரியார்கள் நூர் பற்றிய அந்த ஹதீதை ஸஹீஹென்று சொன்னதன் கருத்து "நூர்" என் றால் "ரூஹ்" என்பதுதான் அதற்குரிய கருத்தாகும். இதே



கருத்தைத்தான் முல்லா அலி காரி அவர்களும் தமது மிர்காத் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று கூறுவதன் மூலம் முல்லா அலி காரியும் முதன் முதல் நபியவர்களின் நூர் படைக்கப்பட்டதென்னும் கருத்துக்கு மாறான கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்று அவராகவே நினைத்துக்கொண்டு சந்தோஷப்பட்டுக் கொள்கிறார். இது நல்லதல்ல.

ஏனெனில் சர்பராஸ் சாஹிபவர்கள் இமாம் முல்லா அலி காரியின் "அல் மௌலிதுர் ரவி" என்னும் நூலின் 44 வது பக்கத்தை எடுத்துப் பார்க்க வேண்டுகிறோம். அதில் நூர் சம்பந்தமாக ஹழரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு வால் அறிவிக்கப்படும் ஹதீதை பதிவு செய்துள்ளது குறிப்பி டத்தக்க ஒன்றாகும்.

எனவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக் கப்பட்டது. அதன் பின்னரே மற்ற சிருஷ்டிகளனைத்தும் படைக்கப்பட்டன. இதை அல்லாஹ் எப்படிச் சொல்கிறா னென்று பாருங்கள்.,,,

حدثنا علي بن حمشـــاد العدل املاء ثنا هارون بـــن العبـــاس الهاشمي ثنا جندل بـــن والق ثنا عمرو بـــن اوس الانصاري ثنا سعيد بن ابي عروبة عن قتادة عن سعيد بـــن المسيب عن ابن عباس رضي الله تعالى عنهما قال: اوحـــى الله الى عيسى عليه السلام ياعيسى آمن بمحـــمد وأمر من أدر كه من أمتك أن يؤمنوا به فلولا محمد ما خلقـــت آدم ولولا محمد ما خلقت الجنة ولاالنار

**"(ஈஸா நபியவர்களே!) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீது விசுவாசம் கொள்ளும். இன்னும் உமது சமுதாயத்தினரில் அவரது காலத்தைப் பெற்றுக் கொள்வோரையும் விசுவாசம் கொள்ளச் சொல்லும். ஏனெனில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இல்லையேல் நான் ஆத**

மைப் படைத்திருக்க மாட்டேன். சுவர்க்க நரகத்தையும் படைத்திருக்க மாட்டேன் என்று அல்லாஹ் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வஹீ அறிவித்ததாக ஹழரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்."

இந்த ஹதீதை இமாம் ஹாகிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது முஸ்தத்ரக்கில் பதிவு செய்துவிட்டு "ஹாதா ஹதீதுன் ஸஹீஹுல் இஸ்னாதி வலம் யுக்ரிஜாஹ்" என்று கூறுகின்றனர். அதாவது, இது புகாரி, முஸ்லிம் ஆகிய இருவரது நிபந்தனைகளுக்கும் உட்பட்ட ஸஹீஹான அறிவிப்பாளர்களைக் கொண்ட ஹதீதாகும். இருப்பினும் அவர்கள் இதை பதிவு செய்யவில்லை என்று கூறுகிறார். பாகம்-2, பக்கம்-672.

ஆனால் இமாம் தஹ்பீ என்பவர் தமது தல்கீசில் இந்த ஹதீதைப் பற்றி "அழுன்னுஹு மௌழூஅன்" இது மௌழூஆ (இட்டுக் கட்டப்பட்டதா)க இருக்குமென்று நினைக்கிறேன் எனக்கூறுகிறார். இவர் என்ன நினைக்கிறார் என்பது நமக்கு முக்கியமல்ல. ஏனெனில் இந்த ஹதீதை இமாம் சுப்கி, இமாம் புல்கீனி போன்றோர் ஸஹீஹான ஒன்றென உறுதிப்படுத்தி உள்ளனர். இன்னும் இந்த ஹதீதை "அஷ்ஷீரத்துஷ் ஷாமிய்யா" என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-94ல் இமாம் தைலமி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் அறிவித்துள்ளதாக அர்ரத்துல் முஹ்கம் என்னும் நூலில் 20ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

حدثنا أبو سعيد عمرو بن محمد بن منصور العدل ثنا ابو الحسن محمد بن اسحاق ابن ابراهيم الحنظلى ثنا ابو الحارث عبد الله بن مسلم الفهري ثنا اسماعيل بن مسلمة أنبأ عبد الرحمن بن زيد بن اسلم عن ابيه عن جده عن عمر بن الخطاب رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وآله وسلم لما إقترف آدم الخطيئة قال يارب أسئلك بحق محمد صلى الله عليه وآله وسلم لما غفرت لي فقال الله



ياآدم وكيف عرفت محمدا ولم أخلقه؟ قال يارب لأنك لما خلقتني بيدك ونفخت في من روحك رفعت رأسي فرأيت على قوائم العرش مكتوبا لااله إلاالله محمد رسول الله صلى الله عليه وآله وسلم فعلمت أنك لم تضف الى إسمك إلا أحب الخلق إليك فقال الله صدقت ياآدم إنه لأحب الخلق إلي أدعني بحقه فقد غفرت لك ولولا محمد ما خلقتك

"ஹழரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களில் மறதியொன்று நிகழ்ந்தபோது, அவர்கள்; இறைவா! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் என்னை மன்னிப்பாயாக எனப் பிரார்த்திக்க, அதற்கிறைவன்; நான் இன்னும் அவரை வெளிப்படுத்தவே இல்லை. அப்படியிருக்க உமக்கு அவரை எப்படித் தெரியுமென்று கேட்டான். அதற்கவர்கள்; இறைவா! நீ உனது முபாரக்கான குத்ரத்தைக்கொண்டு என்னைப் படைத்து அதன்பின் ரூஹை ஊதினாய். அப்போது நான் எனது தலையை உயர்த்திப் பார்த்தபோது அர்ஷுடைய தூண்களில் "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். அப்போது உனது பெயருடன் இன்னொருவரின் பெயரும் இணைந்திருக்குமாயின் அவர் உனக்குப் பிரியமானவராகத்தான் இருப்பார் என்பதை தெரிந்து கொண்டேன் என்று சொல்ல, அதற்கிறைவன்; ஆதமே! நீர் உண்மை சொன்னீர். கண்டிப்பாக அவர் எனக்குப் பிரியமானவரே. அவர் பொருட்டால் என்னிடம் கேளும். உனக்கு மன்னிப்புத் தருகிறேன். அத்துடன் அந்த முஹம்மத் இல்லையென்றால் உம்மைப் படைத்திருக்க மாட்டேன் என்றும் கூறினான் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்." (அ-ர் ஹழரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு)

இந்த ஹதீதை இமாம் ஹாகிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "அல் முஸ்தத்ரக்" என்னும் நூலின் பாகம்-

2, பக்கம்-672ல் கூறிவிட்டு.,,,

இது ஸஹீஹான அறிவிப்பாளர்களைக் கொண்ட ஹதீதாகும். அத்துடன் இது அப்துர் ரஹ்மானைக் கொண்டு அறிவிக்கப்பட்ட முதல் ஹதீதுமாகும் என்றும் கூறுகின்றனர்.

ஆனால் இமாம் தஹ்பீ இதையும் ஓர் இட்டுக்கட்டப்பட்ட ஹதீதாகுமென்று கூறுகிறார். இதை யாரும் பொருட்படுத்தத் தேவையில்லை. ஏனெனில் இவர் மிகக் கடினமாவர் என்பது அனைவருக்கும் தெரியுமென்று யூசுப் அஸ்ஸய்யிது ஹாஷிமுர் ரிபாயி என்பவர் தமது "அர்ரத்துல் முஹ்கம்" என்னும் நூலில் 20வது பக்கத்தில் கூறிவிட்டு.,,,

இந்த ஹதீத் இமாம் பைஹகீ அவர்களின் "தலாயிலுன் நுபுவ்வத்" என்னும் நூலில் 5-489ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இமாம் பைஹகீ அவர்கள் தமது நூலில் "மௌழூவு" எனத்தெரிந்த எந்தவொரு தகவலையும் பதிவு செய்யவில்லை என்றும் இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "அத்தௌஹீது மினல்லாயில் மஸ்னூஆ" என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கே கவனிக்கத்தக்க ஒன்றாகும். பின்னும்.,,,

இதை ஒரு மௌழூஆன ஹதீஸென்று சொன்ன இமாம் தஹ்பி அவர்கள், அந்த ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ள தலாயிலுன் நுபுவ்வத் என்னும் நூல் சம்பந்தமாகப் பேசும் போது, இந்நூல் விஷயத்தில் கவனமாக இருந்துகொள். ஏனெனில் நிச்சயமாக அதில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் ஹிதாயத்துக்குரிய விஷயங்களாகும் என்று கூறியுள்ளார். (நூல் : அர்ரத்துல் முஹ்கம், பக்கம்-20.)

இன்னும் இந்த ஹதீதை ஹாபிழ் இப்னு கதீர் அவர்கள் தமது "அல் பிதாயா வந் நிஹாயா" என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-81ல் குறிப்பிட்டபின், இதனை இமாம் ஹாகிம், இமாம் பைஹகீ, இப்னு அஸாகிர் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரும் தமது நூல்களில் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் இந்த ஹதீதைப் பதிவு செய்துள்ள இமாம்



பைஹகீ அவர்கள், இந்த ஹதீதை அப்துர்ரஹ்மான் பின் ஸைத் பின் அஸ்லம் என்பவர் மட்டும் அறிவித்துள்ளார். இவர் ழயீபானவராகும். இருப்பினும் அனைத்தையும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே என்றும் கூறியுள்ளார்.

இதுபோலவே இமாம் ஹாகிம் அவர்கள், இந்த ஹதீதை ஸஹீஹ் என்று குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இமாம் பைஹகியும் தமது நூலில் பதிவு செய்திருப்பதால் இதுவே மிகப்பெரும் ஆதாரமெனக் கருதி பெரும்பான்மையான பெரியோர்கள் இந்த ஹதீதை தமது நூல்களிலும் பதிவு செய்துள்ளனர். அவற்றை எல்லாம் உங்களுக்கு வரிசைப்படுத்திக் காட்டுமுன்னரே இமாம் தஹ்பி இதை மௌழூவு என்று சொல்லுவதையும் நாம் குறிப்பிட்டுக் காட்டினோம்.

மேலும் நம்மில் பலபேர் இந்த ஹதீதை ழயீப் என்றும், மௌழூவு என்றும் சொல்லி வருவதையும் நாம் அறிவோம். இவ்வாறு சொல்பவர்கள் இந்த ஹதீதை அறிவிப்பவர்களின் வரிசைப் பட்டியலை ஆய்வு செய்துதான் சொல்கிறார்களே அன்றி இந்த ஹதீதில் கூறப்பட்டுள்ள விஷயத்தின் கருத்தை ஆய்வு செய்தல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பின்னும் இந்த ஹதீதை இமாம் தஹ்பி அவர்கள் பொய்யான ஒன்றெனக் கூறியது இவர்களுக்கு ஆதாரமாகுமானால், ஹாகிம் போன்றோர் இது நம்பத்தகுந்த ஹதீதென்று கூறியதே நமக்கு ஆதாரமாகும். இது நமக்கு பெருமையும் கூட.

"ஜர்ஹுத் தஃதீலுடைய" விஷயத்தில் இமாம் தஹ்பியைப் பின்பற்றி இந்த ஹதீதை மறுப்போர் அதே இமாம் தஹ்பியால் நம்பத்தகுந்தவர் நேர்வழிக்குரிய நூலாசிரியர் என்றெல்லாம் சொல்லப்பட்ட இமாம் பைஹகீ அவர்கள் ஸஹீஹானதென்று சொன்னதை ஏன் ஏற்க முடியாமல் போய்விட்டது?

இன்னும் இமாம் ஹாகிம் மற்றும் இமாம் பைஹக்கியுடைய தீர்ப்பே நம்பிக்கைக்குரிய ஒன்றென்பதற்கு மற்ற இமாம்களான சுயூத்தி, கஸ்த்தலானி, ஸுர்க்கானி, சுப்கி, புல்கீனி, ஸைனி தஹ்லான், யூசுபுன் நப்ஹானி, இப்னு கதீர்,

அப்துல் கரீம் ஜீலி, சம்ஹூதி, முல்லா அலி காரி, இப்னு ஹஜர் ஹைதமி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரே நமக்கு போதுமானவர்களென்று நாம் நம்புகிறோம். எனவே இந்த நபிமொழி பதிவு செய்யப்பட்டுள்ள சில நூல்களையும் இப்போது பார்ப்போம்.

1. ஹுஜ்ஜத்துல்லாஹி அலல் ஆலமீன் பக்கம்-28.
2. அத்துரருஸ் ஸனிய்யா
3. அல் மகாலாத்துஸ் ஸனிய்யா பக்கம்-105.
4. மபாஹிம் யஜிபு அன்ய் யுஸஹ்ஹஹ பக்கம்-62.
5. அர்ரத்துல் முஹ்கம் பக்கம்-19.
6. ஹகீகத்துத் தவஸ்ஸுலி வல் வஸீலா பக்கம்-49.
7. தப்ரானி முஃஜிமுஸ் ஸகீர்
8. குலாஸத்துல் வபா பி அக்பாரி தாரில் முஸ்தபா பாகம்-1, பக்கம்-411.
9. ஷவாஹிதுல் ஹக் பக்கம்-37.
10. சிலாஹுல் முஃமின் பக்கம்-130.
11. உன்மூதஜுல் லபீப் பீ கஸாயிஸில் ஹபீப் பக்கம்-15.
12. ரியாழ் சம்தித் துரர் பக்கம்-11.
13. மவாஹிபுல் லதுன்னிய்யா
14. ஸுர்கானி அலல் மவாஹிப்
15. மௌஸூஅத்துல் யூசுபிய்யா
16. அத்தவஸ்ஸுலு பில் அன்பியாயி வஸ்ஸாலிஹீன்
17. அஷ்ஷரீஆ பக்கம்-432.
18. பிக்ஹுஸ் ஸுன்னா
19. மிக்யாஸே நூர் - உர்து
20. தௌழீஹுல் பயான் - உர்து
21. ரப்புல் மினாரா
22. அல் மௌலிதுர் ரவி பில் மௌலிதின் நபி பக்கம்-47, முல்லா அலி காரி.
23. மௌலிதிர் ரஸூலில்லாஹ் பக்கம்-19, இப்னு கதீர்.
24. மௌலிதுன் நபி பக்கம்-18, இப்னு ஹஜர் ஹைதமி.

மேற்கண்ட நூல்களையும் மற்றும் அதன் ஆசிரியர்களையும் நாம் நம்ப வேண்டும். ஏனெனில் இந்த ஹதீதை எவராலும் பொய்யாக்க முடியாதென்பதாலே. அப்படியே ஒருக்கால் சிலர் பொய்யாக்க முனைந்தாலும் அது அந்த ஹதீதை அறிவிக்கின்ற அறிவிப்பாளர்களின் வரிசையை



அடிப்படையை முன்வைத்துத்தான் சொல்ல முடியுமே அன்றி மற்றபடி இந்த ஹதீத் எதைக் குறித்து பேசுகிறதோ அந்த விஷயத்தை அடிப்படையாக வைத்து ஒருபோதும் பொய்யாக்கவே முடியாது. ஏன் முடியாது தெரியுமா?

இவ்வுலகில் படைக்கப்பட்டவை அனைத்தும் மனிதனுக்காகவும், மனிதன் தன்னைப் படைத்தவனை அறிவதற்காகவும் வணங்குவதற்காகவும் படைக்கப்பட்டுள்ளானாகையால் இப்பூமியிலுள்ள மலைகளும், மரங்களும், வானமும், பூமியும், சந்திரனும், சூரியனும், கடலும், கரையும் அந்த மனிதனுக்காகப் படைக்கப்பட்டிருப்பதால் இந்த ஹதீதை ஒருபோதும் பொய்யாக்க முடியாதென்றே திண்ணமாகச் சொல்லுவோம்.

அடுத்து இப்பூமியும் இதிலுள்ளவைகளும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டதென்று சொல்லப்பட்டாலும் இதில் எல்லா மனிதர்களும் ஒருவருக்கொருவர் சமமானவர்களா என்று கேட்டால் இல்லையென்று தான் பதில் சொல்லுவோம். ஏனெனில்...,

حدثنا ابو المغيرة حدثنا صفوان حدثني شريح يعني ابن عبيد قال ذكر أهل الشام عند عليّ بن أبي طالب وهو بالعراق فقال إلعنهم يا أمير المؤمنين قال لا: إني سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول الأبدال يكونون بالشام وهم أربعون رجلا كلما مات رجل أبدل الله مكانه رجلا. يسقى بهم الغيث وينتصر بهم على الأعداء ويصرف عن أهل الشام بهم العذاب

**“ஸய்யிதுனா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஈராக்கில் இருக்கும்போது, அவர்களிடம் அமீருல் முஃமினீனே! ஷாம் தேசத்தினரை சாபமிடுங்களென்று சொல்லப்பட்ட போது, அதற்கவர்கள்; முடியாதென்று மறுத்ததுடன், அங்குதான் அப்தால்கள் எனப்படுவோர் இருப்பர். அவர்கள் மொத்தம் நாற்பது பேராகும்.**

**அவர்களில் ஒருவர் மரணமடைந்தால் இன்னொருவர் அந்த இடத்தில் நியமிக்கப்படுகிறார். இன்னும் அவர்கள் பொருட்டே மழை பொழிகின்றது. எதிரிகளிடமிருந்து வெற்றி கிடைக்கிறது. முஸீபத்துக்கள் தூரமாக்கப்படுகின்றன என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்று கூறினர்.”**

*நூல் : முஸ்னத் அஹ்மத், பாகம்-1, பக்கம்-326.)*

حدثنا علي بن سعيد ثنا إسحاق بن رزيق الراسي ثنا عبد الوهاب بن عطاء عن سعيد بن أبي عروبة عن قتادة عن أنس رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وآله وسلم لن تخلو الأرض من أربعين رجلا مثل خليل الرحمن فبهم يسقون وبهم ينصرون ما مات منهم أحد إلا أبدل الله مكانه آخر

**“இப்பூவுலகில் அல்லாஹ்வின் கலீபாவாகிய இப்ராஹீம் நபியைப் போல் (இதயமுடையோர்) நாற்பது பேர் எப்போதும் இருந்துகொண்டே இருப்பர். அவர்கள் பொருட்டே மழை பொழிகிறது. இன்னும் அவர்கள் பொருட்டே விரோதிகளுக்கு எதிராக வெற்றி கிடைக்கின்றன. அவர்களில் ஒருவர் மரணமடைந்தால் இன்னொருவர் அவருக்குப் பகரமாக்கப்படுகிறார் என்று எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்.”** *(நூல்: தப்ரானி, அல் அவ்ஸத், மஜ்மவுல் பஹ்ரைன், பாகம்-7, பக்கம்-38. பாபு ஃபில் அப்தால்.)*

*எனவே இவ்வுலகிலுள்ள அனைத்தும் மனிதர்களுக்காக என்று படைக்கப்பட்டிருந்தாலும் அம்மனிதர்களிலுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் சமமானவரல்ல. மாறாக அவர்களில் அல்லாஹ்வைக் கொண்டு பொருந்திக் கொள்ளப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் பொருட்டால் தான் இப்புவியிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பிரயோஜனம்*



*அளிக்கப்படுகிறது. அந்த நல்லடியார்களின் பொருட்டால் தான் மழை பொழிகிறது. ஆகையால் மனிதனுக்காக இவ்வுலகம் படைக்கப்பட்டதெனக் கூறுவதை விட நல்லடியார்களுக்காகவே இவ்வுலகம் படைக்கப்பட்டதென்று சொல்வது தான் ஏற்றமாகும். இன்னும் அடுத்து வரும் ஹதீதையும் கொஞ்சம் பாருங்கள்.,,,*

حدثنا علي بن محمد بن عبيد الحافظ ثنا احمد بن سعيد الزهري حدثنا عبد العزيز بن ابى سلمة العمرى ثنا محمد بن عون مولى أم يحى بنت الحكم عن أبيه قال قال محمد بن مسلم بن شهاب أخبرني ابو سلمة عن ابي هريرة رضي الله عنه قال سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول: خرج نبيّ من الأنبياء بالناس يستسقى فإذا هو بنملة رافعة بعض قوائمها الى السماء فقال إرجعوا فقد أستجيب لكم من أجل شأن هذه النملة

**“நபிமார்களில் ஒருவர் தமது சமூக மக்களுக்காக வேண்டி மழைக்காக பிரார்த்திக்க வெளியே வந்தார். அப்போது ஒரு எறும்பு தனது காலை வானத்தின் பக்கமாக உயர்த்திக் கொண்டிருந்தது. அதுபோது அல்லாஹ், அந்த எறும்புக்காக உமது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறினான் என்பதாக எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர்.** *(நூல் : தாரகுத்னீ, பாகம்-2, பக்கம்-53. கிதாபுல் இஸ்திஸ்கா)*

*இந்த ஹதீதை இமாம் ஹாகிம் தமது நூலின் பாகம்-1, பக்கம்-473, கிதாபுல் இஸ்திஸ்காவில் கூறிவிட்டு, “ஹாதா ஹதீதுன் ஸஹீஹுன்” இது அறிவிப்பாளர்களின் வரிசைத் தொடரைச் சரியாகக் காட்டும் உண்மையான ஹதீதாகும் என்று கூறுகிறார். இக்கருத்தை இமாம் தஹ்பியும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.*

*எனவே இப்பூமியில் அல்லாஹ்வின் நல்லடியார்கள்*

வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்காகத்தான் மழை பொழிவிக்கப்படுகிறது என்னும் கொள்கையை மேற்கண்ட எறும்பு சம்பந்தப்பட்ட ஹதீத்கூட உறுதிப்படுத்துவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் ஒரு எறும்பைக் கொண்டு அல்லாஹ் ஒரு சமுதாயத்திற்கு மழையைப் பொழியச் செய்தானெனில், திங்களெங் கோமான் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்காக ஆதமையும் அகிலத்தையும் படைத்தானென்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதா? எனவே அருமை நபியவர்களுக்காகத்தான் அகிலங்களனைத்தும் படைக்கப்பட்டன. அவர்களின் ஜோதி தான் முதன் முதலில் படைக்கப்பட்ட ஹகீகத்தான ஒன்றாகும். அதன் பின்னரே படைப்புக்களில் முதன் முதல் தண்ணீரும், அதற்கடுத்து அர்ஷும், அதைத் தொடர்ந்து கலமும் படைக்கப்பட்டன.

பின்னும் அனைத்து சிருஷ்டிப் பொருட்களுக்கும் முன்னதாக முதன் முதல் நமது நபியவர்களின் ஜோதிதான் படைக்கப்பட்டதென்பதை மறுக்கும் இந்த மாயக்காரர்கள் அந்த ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் வரிசைப் பட்டியலை வைத்துத்தான் மறுக்கின்றார்களே அன்றி அந்த ஹதீத் பேசுகின்ற கருத்தை வைத்தல்ல என்று நாம் கூறியதற்குக் காரணம், அனைத்தும் அருமை நபியவர்களுக்காகத் தான் படைக்கப்பட்டன என்பதாலேயே. அத்துடன் அவர்கள் இல்லையேல் அர்ஷுமில்லை. ஆலமும் இல்லையென்று சொல்லப்படும் ஸஹீஹான ஹதீத் எல்லாவற்றுக்கும் முன்னதாக முத்து நபியவர்கள் தான் படைக்கப்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதைக் கொண்டு நாம் புரிந்து கொள்ளலாம். அதன்றி நபியவர்களின் ஜோதிதான் முதன் முதலில் படைக்கப்பட்டது என்பதை மேலும் உறுதிப்படுத்த "லவ்லாக லமா கலக்துல் அஃப்லாக" என்னும் ஸஹீஹான ஹதீதையும் நாம் முன்பே குறிப்பிட்டோம். இருப்பினும்.,,,

"அல்லாஹ் எனது ஜோதியைத்தான் முதன் முதலில் படைத்தான்" என்னும் ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர் நம்பிக்கைக்குரியவரல்ல அத்துடன் இது முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் பதிவு செய்யப்படவில்லையெனக் கூறி மக்களை ஏமாற்றுவதைப் போல நமது நபியவர்கள் தான் முதல் படைப்பு என்பதை ஊர்ஜிதப்படுத்த எம்மால் முன்வைக்கப்



படும், "அவர் இல்லையேல் ஆதமைக்கூட படைத்திருக்க மாட்டேன்" என்னும் ஸஹீஹான ஹதீதை இமாம் தஹ்பி மறுக்கிறார் என்பதற்காகவும் அவர்கள் மறுக்கலாம். ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப் பட்டிருக்க வேண்டும்; படைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த நாம் எடுத்து வைக்கும் ஆதாரத்தை எவராலும் மறுக்க முடியாது என்பதோடு இதுவரை எவருமே மறுக்கத் துணிந்ததுமில்லை. அதுவென்ன என்பதைப் பார்க்கு முன் "அல்லாஹ் எனது ஜோதியைத் தான் முதன் முதலில் படைத்தான்" என்று கூறப்படும் ஹதீத் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாக் என்னும் நூலில் அந்த ஹதீத் பதியப்படவில்லை என்னும் கேள்விக்கு பதில் சொன்னபின். மற்ற விஷயங்களைப் பார்ப்போம்.

அன்பர்களே!

நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு பஷ(மனித)ர் தானென்று வாதிக்கிறது ஒரு கூட்டம். இவர்களுக்கு நாம் பதில்சொல்ல வேண்டியதில்லை. நபியவர்கள் மனித நிலையினைக் கொண்டிருந்ததைப் போலவே ஜோதியின் நிலையையும் கொண்டிருந்தனர் என்கின்றது இன்னுமொரு கூட்டம். ஆனால் இவ்விரண்டாம் தரப்பை சார்ந்தவர்கள் நபியவர்களின் "அவ்வலிய்யத்தான நூரை" பொய்யாக்கப் பார்க்கின்றனர். அதே நேரம் "லவ்லாக லமா கலக்துக யா ஆதம்" என்னும் ஹதீதையும் ஏற்றுக் கொள்வதோடு, "ஆதமுக்கு முன்பே நான் நபியாக இருந்தேன்" என்ற ஸஹீஹான ஹதீதுக்கு அல்லாஹ்வுடைய ஏற்பாட்டில் அவ்வாறு இருந்ததாகவும், "நான் படைப்புக்களில் நபிமார்களுக்கெல்லாம் முதன்மையானவன்" என்னும் ஹதீதை ழயீப் என்றும் ஆதம் நபியவர்கள் தான் முதல் மனிதர் என்பது சரியான தகவல் என்றும் கூறுகின்றனர். மனிதர்களின் தந்தை எனும் பிரச்னையில் ஆதம் நபியவர்கள் தான் முதல் மனிதர் என்பதில் யாருக்குமே சந்தேகமில்லை என்பதை இவர்கள் நன்றாக தெரிந்து கொண்டே இவ்வாறு சொல்வதற்குரிய காரணமென்ன என்பதை பார்க்கும் போது, "அவ்வலு மா கலகல்லாஹு நூரீ" என்னும் ஹதீதை ஏற்க மறுப்பது தானென்று தெரிய வருகிறது.

பின்னும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனிதராகவும் ஜோதியாகவும் இருக்கிறார்கள் என்னும் உண்மையான கொள்கையைக் கொண்ட இவர்கள், நபியவர்களின் ஜோதி தான் முதன் முதலில் படைக்கப்பட்டதென்னும் ஹதீதை மட்டும் ஏற்றுக் கொள்ள மறுப்பதற்குரிய காரணமென்னவென்று வினவப்பட்டால் இந்த ஹதீத் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் இல்லை என்பதுதான் அவர்களது பதிலாக இருக்கிறது.

அவ்வாறாயின் 22-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர் அதே நூற்றாண்டில் அச்சிடப்பட்ட நூலொன்றைப் பார்க்கிறார். அதே நூல் 10-ம் நூற்றாண்டிலும் அச்சிடப்பட்டிருந்தது. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அந்த நூலைப் பார்த்து அதில் சொல்லப்பட்ட தகவலை ஆதாரமாகக் காட்டுகிறார். ஆனால் 22-ம் நூற்றாண்டில் அச்சிடப்பட்ட நூலைப் பார்க்கும் வேறொருவர் அந்தத் தகவல் அந்த நூலில் இல்லையென்று சொல்கிறார். இந்நிலையில் நாம் எவருடைய சொல்லை எடுத்துக் கொள்வதென்னும் கேள்வி பிறக்கிறது. இக்கேள்விக்கான பதிலை நாம் பார்க்க வேண்டுமானால் யார் அந்நூலில் இருப்பதாக ஆதாரம் காட்டுகிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அதாவது.,,

1. மௌழூஆன - பொய்யான ஹதீத் இதில் பதியப்படவில்லையென இமாம் சுயூத்தி றஹிமஹுல்லாஹ் அவர்களால் உறுதி செய்யப்பட்ட "தலாயிலுன் நுபுவ்வத்" என்னும் நூலில் இந்த ஹதீத் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இமாம் பைஹகியின் நூலாகும். (ஸுர்கானி பாகம்-1, பக்கம்-91)

2. இந்த ஹதீதை முஹத்தித் அப்துர் ரஸ்ஸாக் ரஹிமஹுல்லாஹ் அவர்களே ஹழ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹில் அன்ஸாரி ரலியல்லாஹு அன்ஹுவைக் கொண்டு அறிவித்துள்ளதாக அல்லாமா கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "மவாஹிபுல் லதுன்னிய்யா பில் மன்ஹில் முஹம்மதிய்யா" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

3. அல்லாமா கஸ்த்தலானியின் நூலுக்கு விரிவுரை செய்துள்ள இமாம் ஸுர்கானி அவர்கள் பாகம்-1, பக்கம்-81ல் இந்த ஹதீதை விளக்கமாக கூறியுள்ளார்கள். அதில்



அப்துர் ரஸ்ஸாக் அவர்களின் முழுப் பெயரையும், அப்துர் ரஸ்ஸாக் பின் ஹுமாம் பின் நாபிஃ அல் ஹிம்மேரி என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இந்திய நாட்டில் ஹதீதுக் கலையை பிரபலப்படுத்தியவர் என்னும் பெருமைக்குரிய அஷ்ஷைகு அப்துல் ஹக் முஹத்தித் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பல்வேறு நூல்களில் இந்த ஹதீதைக் குறிப்பிட்டு இது ஸஹீஹான ஒன்றெனவும் கூறுகின்றனர். இவர் இந்திய நாட்டில் அனைவராலும் மதிக்கப்படுகின்ற ஒருவராகும்.

5.இந்திய தேசத்தில் தப்லீக் ஜமாஅத்தினரால் பெரும் மேதையெனக் கணிக்கப்படும் அஷ்ரப் அலி தானவி என்பவர் தமது "நஷ்ருத்தீப்" என்னும் நூலிலும் இந்த ஹதீதைக் குறிப்பிட்டு சரி கண்டுள்ளார். அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை தரக்குறைவாகப் பேசுவதை அடிப்படையாகக் கொண்ட இவரே இந்த ஹதீதை ஸஹீஹான ஒன்றென ஏற்றுக் கொண்டுள்ளார் எனில் இந்த ஹதீத் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் இடம் பெற்றுள்ளது என்பது உறுதியாகி விட்டது.

6. பாகிஸ்தானிலுள்ள எல்லா கல்லூரிகள் மற்றும் வாசகசாலைகளிலும் ஏன்! பொது இடங்களில் எல்லாம் வாசிக்கின்ற நிலையினைக் கொண்டுள்ள ஒரு நூலாசிரியர் உண்டெனில் அவர் அல்லாமா அஹ்மத் தாஹிருல் காதிரி என்பவராவார். அவர்கூட தமது தப்ஸீர் ஆயத் அந்நூர் என்னும் நூலில் இந்த ஹதீதைக் குறிப்பிட்டு, இது முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் உள்ளதாகக் கூறியிருப்பதோடு தற்காலத்தில் அச்சிடப்படும் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் இருந்து இந்த ஹதீத் நீக்கப்பட்டிருப்பது மிக மிக வேதனைக்குரிய ஒன்றெனவும் கூறியுள்ளார்.

எனவே தற்போது அச்சிடப்படும் நூலைப் பார்த்து விட்டு அதில் இந்த ஹதீத் இல்லையென்னும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இனி இப்படிப்பட்ட முடிவுக்கு வருவோர் இந்த ஹதீதைத் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ள பெரியோர்கள் அனைவரையும் பொய்யாக்க வேண்டி வரும். எனவே இந்த நபிமொழி முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் தான்

குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அதோர் ஸஹீஹான ஹதீத்தான் என்பதற்கு மேற்கண்ட பெரியார்களே நமக்குப் போதும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறோம்.

பின்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்களின் ஜோதியைத்தான் முதன் முதல் அல்லாஹ் படைத் தான் என்றறிவிக்கும் ஹதீதை அது குறிப்பிடப்பட்டுள்ள தாகச் சொல்லப்படும் நூலில் இல்லை என்பதற்காக பொய் யாக்கக் கூடாது. இனி பொய்யாக்குபவர்கள் இந்த ஹதீதைப் பற்றிய இமாம் சுயூத்தியின் கருத்தை தமக்கு ஆதரவாகக் காட்டுகின்றனர். அதாவது.,,,

"இந்த நபிமொழிக்கு நம்பத் தகுந்த இஸ்னாத் - அறிவிப் பாளர்கள் இல்லை" என்பதாக அல் ஹாவி வில் பதாவா என்னும் நூலில் கூறப்பட்டுள்ளதென்றும், ஸரீஹுல் பயான் என்னும் நூலாசிரியர் இது தெளிவானதோர் பொய் தகவல் என்றும் கூறுகிறார்.

ஸரீஹுல் பயானின் நூலாசிரியர் இந்த ஹதீதைப் பொய்யாக்க இமாம் சுயூத்தியின் சொல்லை ஆதாரமாகக் காட்டியிருக்க வேண்டியதில்லை. ஏனெனில் இந்த ஹதீதை அறிவித்தவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்றுதான் சொன்னார்களே அன்றி, அந்த ஹதீத் தனக்குள் கொண் டுள்ள கருத்து நம்பிக்கைக்குரியதல்ல என்று சொல்லவில்லை. இன்னும் இந்த ஹதீதை அறிவித்தவர்களைக் காரணம்காட்டி இதையொரு பிரச்னையாக்க முடியுமென்று ஆரம்பத்தி லேயே நாம் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

இனி இந்த ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் வரிசைப் பட்டியலைக் காரணமாக்கி இந்த ஹதீத் பொய் யான ஒன்றெனக் கூறுவோரில் ஒருவர் "நூரோ வ பஷர்" என்னும் நூலாசிரியருமாகும். இந்த நூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனிதர் மட்டுமின்றி ஜோதி யானவர்களும் தானென்பதையும், அந்த ஜோதியைத் தான் அல்லாஹ் முதன் முதலாகப் படைத்தான் என்பதையும் நிரூபித்து எழுதப்பட்ட நூலுக்கு மறுப்பு நூலாகும்.

இந்த நூலின் 36 பக்கங்களை நமது நாயகம் ஸல்லல்



லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மனிதர் தானென்பதை ஆதாரப்படுத்த வீணாக்கியுள்ளார். நபியவர்கள் மனிதரல்ல என்று யார் சொன்னார்கள்? நம்மை போன்ற ஒரு சாதா ரண மனிதர் என்றுதான் சொல்லக்கூடாது. இவ்வாறே நபியவர்கள் வெறும் ஜோதி மட்டும் தானென்றும் யாரும் சொல்வதில்லை. விஷயம் இவ்வாறிருக்க இவர், நாம் நபிய வர்களை மனிதரல்ல என்று கூறுவதாக நம்மீது குற்றஞ் சாட்டுவது வேடிக்கையிலும் வேடிக்கையே.

மேலும் தேவ்பந்த் உலமாக்களில் ஒருவரான இவர் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மனிதரென்றும் ஜோதியென்றும் ஏற்றுக்கொண்ட போதிலும் நபியவர்களின் ஜோதிதான் முதன் முதல் படைக்கப்பட்ட தென்பதை சுட்டிக் காட்டும் ஹதீதைப் பொய்யாக்குகிறார். பின்னும் இந்த ஹதீதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதற்கு இவர் சொல்லும் காரணங்களில் ஒன்று இதை அறிவிக்கும் அப்துர் ரஸ்ஸாக் என்பவர் ஒரு ஷியாவாகுமென்று குற்றஞ் சாட்டும் இவர், தன்னை மறந்தோ என்னவோ தெரியவில்லை. அதே நூலின் 100வது பக்கத்தில் அப்துர் ரஸ்ஸாக் நம்பிக் கைக்குரிய பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவரென் றும் கூறுகிறார். இதற்குப் பெயர்தான் இரட்டை வேடமோ?

இன்னும் இந்த ஹதீத் தனக்குள் கொண்டுள்ள கருத்தை எவரும் பொய்யான ஒன்றென ஏன் நிரூபிக்க முடி யாது போயிற்று? ஹதீதை அறிவித்தவர்கள் சரியில்லை என் றும், இந்த ஹதீத் அப்துர் ரஸ்ஸாகில் குறிப்பிடப்படவில்லை என்றும் வாதிப்பவர்கள், நபியவர்களின் ஜோதி முதன் முதல் படைக்கப்படவில்லை. அவ்வாறு படைக்கப்பட்ட தாக சொல்லப்படும் ஹதீத் பொய்யானது, வீணானது, இட்டுக் கட்டப்பட்டது என்று சொல்வதற்குரிய துணிச்சல் யாருக்குமே ஏன் வரவில்லை? இதற்குரிய காரணத்தை அல்லாஹ் சொல்கிறான்.,,,

وما ارسلناك إلا رحمة للعالمين

**"நபியே! உம்மை நாம் அகிலத்தார் அனைவருக்கும் அருளாகவே அன்றி அனுப்பவில்லை"** என்று கூறுகிறான்.

இந்த வசனத்தை நன்கு அறிந்தவர்கள் நபியவர்களின் ஜோதியே அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டதென்னும் ஹதீதைக் கண்டபோது, அந்த ஹதீதின் பொருள் இந்த வசனத்திற்குள் பொதிந்திருப்பதை உணர்ந்து கொண்டபோது, அதன் அறிவிப்பாளர்களை ஆய்வு செய்யவே, அந்த ஹதீதில் குறிப்பிட்டுக் காட்டப்படும் வாக்கியங்களுக்குத் தான் தெளிவான ஆதாரமில்லை என்று சொன்னார்களே அன்றி அந்த ஹதீதின் கருத்தை ஆய்வு செய்தல்ல. ஏனெனில் நபியவர்கள் தான் முதன்முதல் படைக்கப்பட்டிருக்க வேண்டும். படைக்கப்பட்டார்கள் என்னும் கருத்தை மிகத் துல்லியமாக இவ்வசனம் எடுத்துக் காட்டுவதாலே. இதை நாமும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**"நபியே! நீர் அகிலங்கள் அனைத்துக்கும் அருளாகவே அனுப்பப்பட்டுள்ளீர்கள்"** எனக் கூறப்படுவதை கவனியுங்கள்.

இதில் அகிலங்கள் என்று சொல்லப்பட்டால் அல்லாஹ்வைத் தவிரவுள்ள எல்லா சிருஷ்டிப் பொருட்களும் அதற்குள் அடங்கிவிடும். ஆதலால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனித இனத்திற்கு மட்டுமல்ல. ஜின் வர்க்கத்திற்கு மட்டுமல்ல. வானம் பூமியிலுள்ள அனைத்து சிருஷ்டிப் பொருட்களுக்கும் அவர்களே அருளாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மேற்கண்ட வசனத்தில் குறித்துக் காட்டப்படும் "ரஹ்மத்" என்னும் பதம் மஸ்தரா (உருவாகும் ஸ்தலமா)கும். ஆதலால் மஸ்தராக இடம் பெற்றுள்ள ஒரு பதம் இஸ்ம் ஃபாயிலுடைய கருத்தையும் சட்டத்தையும் உள்ளடக்கும் என்பது அரபி மொழியின் இலக்கண நியதி. எனவே ரஹ்மத் என்னும் பதத்திற்கு "ராஹிம்" (அருள் புரிபவர்) என்ற பதத்தையும் பயன்படுத்தலாம். ஆகையால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எத்தனை உலகங்களுண்டோ அத்தனை உலகங்களுக்கும் அருள் புரிபவர்களாகப் படைக்கப்பட்டவர்கள். பின்னும் அருள் புரிகின்ற ஒருவர் அருளப்படும் பொருட்கள் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பே படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் நியதியாகும்.



பாருங்கள்! தண்ணீருக்கு அருள்புரிந்தார்கள், அர்ஷின் நடுக்கம் நீங்க அருள் புரிந்தார்கள், கலமுக்கு அருள் புரிந்தார்கள் எனில் இவையனைத்தும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தயாளத்தினாலேயே இயங்குகின்றன என்னும்போது அந்த ஜோதிக்குமுன் எந்தப் பொருள் படைக்கப்பட்டிருக்க முடியும்? மாறாக அந்த ஜோதியிலிருந்து தான் எல்லாமே படைக்கப்பட்டன. இதைத் தான் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மூலமாக அப்துர் ரஸ்ஸாகைக் கொண்டு அறிவிக்கப்பட்ட "உமது நபியின் ஜோதியைத்தான் அல்லாஹ் முதன் முதலில் படைத்தான்" என்ற ஹதீதின் பிற்பகுதி சொல்லிக் கொண்டிருக்கின்றது. அதாவது.,,,

**"அல்லாஹ்வின் ரஸூலே! உங்களுக்கு எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டும். முதன் முதல் அல்லாஹ் எதைப் படைத்தான் என்பதை எனக்குக் கூறுங்கள் என்று கேட்க, அதற்கு நபியவர்கள்; உமது நபியின் "நூரை" (ஜோதியை)த்தான் அல்லாஹ் தனது ஜோதியிலிருந்து முதன் முதல் படைத்தான். அதன்பின் அந்த ஜோதி அல்லாஹ்வின் விருப்பப்படி சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது லௌஹு, கலம், சுவர்க்கம், நரகம், வானவர்கள், வானம், பூமி, சூரியன், சந்திரன், ஜின், மனிதன் போன்ற எதுவுமே இருக்கவில்லை. பின்பு அல்லாஹ் சிருஷ்டிகளை சிருஷ்டிக்க நாடிய போது அந்த ஜோதியை நான்கு பாகங்களாக்கி முதல் பாகத்திலிருந்து கலமையும், இரண்டாம் பாகத்திலிருந்து லௌஹையும், மூன்றாம் பாகத்திலிருந்து அர்ஷையும் படைத்தான். பின்னர் நான்காம் பாகத்தை நான்கு பாகமாக்கி அர்ஷை சுமப்பவர்களை முதல் பாகத்திலிருந்தும், குர்ஸியை இரண்டாம் பாகத்திலிருந்தும், வானவர்களை மூன்றாம் பாகத்திலிருந்தும் படைத்தான். பின்னர் அந்த நான்காம் பாகத்தை மீண்டும் நான்காகப் பிரித்து அதன் முதல் பகுதியிலிருந்து வானங்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து பூமிகளையும், மூன்றாம் பகுதியிலிருந்து சுவர்க்க நரகங்**

**களையும் படைத்தான்."** இதன் இறுதி வரையுள்ள விஷயங்களை மூலநூலைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

எனவே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதலாகப் படைக்கப்பட்டது. அதன்பின் அந்த ஜோதியிலிருந்துதான் அனைத்தும் தோற்றுவிக்கப்பட்டன. அப்படி படைக்கப்பட்ட ஜீவராசிகளில் மனித இனம்தான் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த படைப்பாகும். அந்த மனித இனத்திலும் நபிமார்கள் மிக முக்கியமானவர்கள். அதனால்தான் நபியவர்கள் "அன அவ்வலுன் நபிய்யீன பில் கல்கி" படைக்கப்பட்ட நபிமார்களில் எல்லாம் நான்தான் முதன்மையானவன் எனக் கூறுவதன் மூலம் இவ்வகிலமனைத்திலும் முதன் முதலாக எனது ஜோதிதான் படைக்கப்பட்டதென்று சுட்டிக் காட்டுகின்றனர்.

**"நான் ஆதம் தண்ணீருக்கும் கழிக்கும் இடையிலிருக்கும் போதே நபியாக இருந்தேன்"** என்றும்,

**"ஆதம் தண்ணீர், கழி ஆகிய எதுவுமே இல்லாதிருக்கும் போதே நபியாக இருந்தேன்"** என்றும் சொன்னதாகக் கூறுகின்றனர். இவைகள் மௌலித் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உண்மையில் இதுபோன்ற விஷயங்கள் சொல்லப்பட்டதற்குரிய தெளிவான ஆதாரம் ஹதீதுக் கிரந்தங்களில் இல்லையென்ற போதிலும் இவ்விஷயங்கள் தனக்குள் கொண்டுள்ள கருத்துக்களை பொய்யென்று எவராலும் சொல்ல முடியவில்லை. அதனால் தான் இவைகள் ழயீபானவை என்று தீர்ப்பளிக்கப்பட்டு விட்டன.

இருப்பினும் இப்போது உங்களுக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியிலிருந்துதான் எல்லாமே படைக்கப்பட்டன என்பதும், அவர்களுக்காகத்தான் எல்லாமே படைக்கப்பட்டன என்பதும், அவர்கள் இல்லையென்றால் எதுவுமே படைக்கப்பட்டிருக்காது என்பதும் தெளிவாகப் புரிந்திருக்கும். இப்போது இதே



போன்றதொரு கருத்தைக் கொண்டுள்ள இன்னொரு ஹதீதையும் உங்களின் பார்வைக்குத் தருகிறோம். இது இப்னு அஸாகிரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக இமாம் அல்ஹாபிழ் அல் முஹத்தித் முல்லா அலி காரி ரஹிம்ஹுல்லாஹ் அவர்கள் தமது "அல்மௌலிதுர் ரவி பில் மௌலிதின் நபவி" என்னும் நூலின் 48வது பக்கத்தில் பதிவு செய்துள்ளார்கள். அதாவது.,,,

هبط جبريل عليه السـلام على النبي صلى الله عليه وآله وسلم فقال إن ربك يقول إن كنت إتخذت ابراهيم خليلا فقد إتخذتك حبيبا وماخلقت خلقا أكرم عليّ منك ولقد خلقت الدنيا وأهلها لأعرفهم كرامتك ومنـزلتك عندي ولولاك ما خلقت الدنيا

**"ஒருமுறை ஸய்யிதுனா ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அண்ணலெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்தபோது, அவர்கள் நபியவர்களை நோக்கி, நிச்சயமாக உங்களுடைய இறைவன் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை தனது கலீலாக எடுத்துக் கொண்டாலும் உங்களை அவன் தனது ஹபீபாக எடுத்துக் கொண்டதாகச் சொல்கிறான். இன்னும் உங்களைவிட சிறந்ததோர் படைப்பை அவன் படைக்கவில்லை என்றும், உலகத்திற்கும், அதிலுள்ளவைகளுக்கும் என்னிடம் உங்களுடைய அந்தஸ்த்து என்னவென்பதைக் காட்டுவதற்காகவே படைத்தேன் என்றும், உங்களைப் படைக்காவிட்டால் உலகத்தையே படைத்திருக்க மாட்டேன் என்றும் அல்லாஹ் சொல்வதாகச் சொன்னார்கள்.** *(நூல்: மவாஹிபுல் லதுன்னிய்யா ஸுர்கானி பாகம்-1, பக்கம்-120)*

எனவே ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அகிலமனைத்துக்கும் "ரஹ்மத்"தாகிய அருள் புரிகின்றவர்களாகும் என்பதும், அவர்கள் படைக்கப்படாவிட்டால் அகிலமே படைக்கப்பட்டிருக்காது என்பதும் அல்லாஹ்வின் கூற்றாதலால் நபியவர்கள் தான் முதன் முதல்

அல்லாஹ்வைக் கொண்டு படைக்கப்பட்டார்கள் என்பது நமக்கு எள்ளளவும் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாகின்றது. ஆதலால் "அல்லாஹ் எனது ஜோதியைத் தான் முதலில் படைத்தான்" என்னும் ஹதீத் ஒரு கூற்றின் பிரகாரம் பதியப் படாதிருந்தாலும் இதனால் நபியவர்களின் உயர்நிலைக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

மேலும் அருள் வடிவான ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் "ரஹ்மத்துன்ல் லில் ஆலமீன்" ஆகிய அகிலங்களுக்கெல்லாம் அருள் புரிகின்றவர்கள் என்னும் திரு மறை வசனத்தையும் "லௌலா முஹம்மதுன்ம் மா கலக்துக" (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் படைக்கா விட்டால் ஆதமையும் படைத்திருக்க மாட்டேன்) என்னும் ஸஹீஹான ஹதீதையும் நம்புகின்றவர்கள், "எனது ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதலில் படைக்கப்பட்டது" என்றொரு ஹதீத் இல்லையென்றாலும் கூட நபியவர்கள் தான் முதன் முதலில் படைக்கப்பட்டவர்கள் என்பது நன்கு புலனாகும் போது, அவ்வலு மா கலகல்லாஹு நூரீ என்னும் ஹதீத் ஸஹீஹான ஹதீதுக்கு நேர்மாற்றமான ஒன்றாகும் எனக்கூறுவது ஆச்சரியமான ஒன்றுதான்.

சகோதரர்களே! அடுத்து சொல்லப்படப் போகும் விஷயத்தை தெளிந்த உள்ளத்துடன் உங்களின் ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளும்படியாக தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**1. "நிச்சயமாக அல்லாஹ் தண்ணீரைப் படைக்கு முன் வேறு எதையும் படைக்கவில்லை."**

**2. "அர்ஷ் தண்ணீரின் மீதிருந்தது."**

**3. "நிச்சயமாக அர்ஷுக்கு முன் தண்ணீர் படைக்கப்பட்டிருந்தது."**

**4. "வானங்களையும் பூமிகளையும் படைக்க 50,000 வருடங்களுக்கு முன்பே சிருஷ்டிகளின் தக்தீரை (விதியை) அல்லாஹ் படைத்து விட்டான். அப்போது அவனது அர்ஷ் தண்ணீரின் மேலிருந்தது."**



மேற்கண்ட ஸஹீஹான ஹதீதுகளிலிருந்து அல்லாஹ் தண்ணீரை முதலிலும் அதற்குப்பின் அர்ஷையும் அதன் பின்னரே தக்தீரையும் படைத்தான் என்பது நமக்குப் புலனாகிறது. தண்ணீரோ அர்ஷோ அல்லது தக்தீரோ எதுவாக இருந்தாலென்ன? இவை எல்லாமே "ஆலமீன்" என்னும் அகிலங்களிலுள்ள படைப்புக்களுக்கு உட்பட்டவைதானே. இந்நிலையில் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவைகளுக்கும் அருள் புரிபவர்கள் தானே. இல்லையென்று மறுக்க முடியுமா? அப்படியானால் இவைகளுக்கெல்லாம் முன்னரே நபியவர்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா! இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

எனவே முதன் முதல் அல்லாஹ் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியைத் தான் படைத்தான். அதற்குப் பிறகு படைக்கப்பட்டவைகளில் முதலாவதாக தண்ணீரையும் அதன்பின்னர் அர்ஷையும் படைத்தானென்று சொன்னால் இது ஸஹீஹான ஹதீதுக்கு மாற்றமென்று வாதம் பேசுகின்றனர்.

அதேநேரம் அல்லாஹ் தண்ணீரைப் படைக்குமுன் வேறு எதையும் படைக்கவில்லை என்பது நம்பிக்கைக்குரிய தகவல். தண்ணீருக்குப்பின் அர்ஷைப் படைத்தான் என்பதும் நம்பிக்கைக்குரிய தகவல். இவ்விரண்டுக்கும் பிறகே தக்தீரைப் படைத்தான் என்பதும் நம்பிக்கைக்குரிய தகவலாகும். ஆனால் இம்மூன்று நம்பிக்கைக்குரிய தகவல்களுக்கு மாற்றமாக.,,,

"அல்லாஹ் கலமைத்தான் முதன் முதலில் படைத்தான்" என்னும் இந்நம்பிக்கைக்குரிய தகவலுக்கு என்ன பதில்? எனவே இந்த ஹதீதைக் குறித்த முழு விபரத்தையும் இப்போது பார்ப்போம்.

عن عبد الله بن عمرو رضي الله عنه قال: قال رسـول الله صلى الله عليه وآله وسلم قال: قدر الله مقادير الخلق قبل ان يخلق السموات والأرض بخمسين ألف سنة وكان عرشه على الماء